www.padippakam.com

334

# அரும்பு

# ARUMPU

மலர் 11
ஆசிரியர்:
அருண்
ஆவணி
வெளியீடு
1995



பரந்த வானில் பறக்கின்றோம் !
பாச உணர்வை வரிக்கின்றோம் !
திறந்த தேசம் இருந்தாலும் !
தே[illegible] உயிரை வெறுக்கின்றோம் !

படிப்பகம்

www.padippakam.com

# அரும்பு

# ARUMPU

மலர் 11

ஆசிரியர்:
அருண்

ஆவணி
வெளியீடு
1995

உள்ளே.....

1. ஆசிரியர் பேனாவிலிருந்து........
2. வீர வன்னிய காவியம்.............
3. நேருக்கு நேர்.........................
4. சிறுபிள்ளை வேளாண்மை...........
5. அம்மா.......................................
6. ஆற்றங்கரையினிலே...................
7. வயற்காற்று சுமந்து வரும் வளமான தமிழ் மண்..................
8. புகழ்........................................
9. வேடதாரி....................................
10. தமிழ் பத்திரிகை உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்......
11. பிரேமன் நகரத்து இசைக்குழு.......
12. வாசகர் கடிதம்...........................
13. எங்கே என் வெல்லி.....................
14. மனித வாழ்வும் சோதிடமும்.........
15. மகளிர் அரங்கு.............................
16. பாலர் உலகம்.............................

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 12.12.1995

தொடர்புகளுக்கு:
S. Sivaganam
Axelborg 7B 2 th,
8700 Horsens
Tlf.: 75 612564

ஆக்கங்களைப் பரிசீலனை செய்யும் உரிமை ஆசிரியருக்குண்டு

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் பேனாவிலிருந்து...

நீண்ட இடைவேளைக்குப் பின் அரும்பு கண்ட அன்பு நெஞ்சங்களின் ஆதரவை பாராட்டுக் கடிதங்களாலும், தொலைபேசி பரிவர்த்தனைகளாலும் உணர முடிந்தது.
புலம் பெயர் தமிழர்களின் உண்மைக் குரலை ஒலிக்கும் இந்த அரும்புக்கு உரிமை கொண்டாட எல்லாத் தமிழர்களுக்கும் உரிமை உண்டு.

இந்த அரும்பு அரசியல் இயக்க சார்பில்லாதது, உங்களது ஆக்கங்கள்எமது இனத்திற்கு ஏதும் ஆக்க பூர்வமான மாற்றம் ஏற்படுத்துமாயின் அதுவே எமது பெருவெற்றி.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்றார் அமரகவி பாரதியார். அந்தத் தெய்வக் கவியின் வாக்குக்கு அமைய எமது தமிழர்களின் நலன் களையே சிந்தனையாக் கொண்டு புறப்படும் இந்த அரும்பு வேறு எந்த சுயநல நோக்கும் கொண்டதல்ல.

நிரந்தரமாக புலம் பெயர்ந்த நாட்டில் தம்மைத் தக்க வைத்தபடி "நாடு நாடு" என்று கூப்பாடு போடும் புகழ் விரும்பிகளின் வாய்ச் சொல் வீரம் இந்த அரும்புக்கு அறவே கிடையாது. எமது தமிழர் பற்றி எதிர்காலச் சிந்தனையோடு அந்தரங்கச் சுத்தத்தோடு நீங்கள் எது விடயம் எழுதினாலும் அது நிட்சயம் அரும்பில் இடம் பெறும்.

இலை மறைகாயாக இருக்கும் தலை சிறந்த எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கு நிட்சயம் அரும்பு களம் அமைத்துக் கொடுக்கும். எமது சிறுவர்களின் எதிர்காலம் பற்றி அரும்புக்கு மிகுந்த கவலை உண்டு சிறுவர்களின் பண்பாடு தமிழ்க்கல்விக்கு அரும்பு தன்னாலான பங்களிப்பைச் செய்யும்.

புலம் பெயர் தமிழ்ப் பெண் மணிகளின் சாதனைகள், சோதனைகள், பெண்விடுதலை பற்றியும் அரும்பு அடிக்கடி குரல் கொடுக்கப் போவதையும் நீங்கள் கேட்கத்தான் போகிறீர்கள். துண்டு துண்டாகத் தூரப்பிரிந்து துயரத்தோடு வாழும் எமது தமிழினம் இந்த அரும்பை உற்ற தோழனாகக் கொண்டு உறவாடமுடியும். உலகின் பல பாகங்களிலும் வாழும் எமது அறிவு ஜீவிகள் அரும்பின் வளர்ச்சிக்கு தம்மாலான பங்களிப்பை நல்கிட முன்வந்துள்ளானர்.

எமது நலன் விரும்பிகளின் இந்த உற்சாகப் படுத்தலானது, இந்த அரும்பு எந்தக் கால நிலையிலும் தைரியமாக தலை நிமிரும் ஊசியிலை மரங்களின் நிலைப் பாட்டை தான் எம்மகத்தே பதிய வைக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# வீர வன்னியகாவியம்

கவிஞர் சி. சிவஞானம்.

## *வன்னி மண்ணின் கீர்த்தி*

6.

வீர வன்னி மண்ணின் கீர்த்தி
விளை நிலங்களாகவே!
ஊரறிந்து மக்கள் கூடி
உவகை பூத்து நிற்கவே!
வாரந்தோறும் மன்னன் வந்து
வழக்குரைத்துச் செல்லவே!
தேரமர்ந்த மன்னன் வரவை
தெருவில் வேடர் காணவே!

7.

காடு நிறை வேடர் கூடி
கரத்த கோசம் செய்யவே!
மாடு மேய்க்கும் இடையர் கூட்டம்
மகிழ்ச்சியோடு பாடவே!
ஆடுகின்ற வேடர் பெண்கள்
அரச கீதம் பாடியே!
நாடு காத்த நல்ல வேந்தன்
நயந்து நின்று பார்க்கவே!

8.

வாளெடுத்து வீரர் வந்து
வளைந்து நின்று பார்க்கவே!
வேலெடுத்த வனிதை நாச்சன்
வேந்தரோடு நிற்கவே!
சோலை எங்கும் வஞ்சியர்கள்
சொர்ண மொழி பேசவே!
வேலை செய்யும் ஏழை மக்கள்
வேந்தர் புகழ் கூறவே!

www.padippakam.com

9.

கண்ணகிக்கு சிலை எடுத்த
காதை சொல்லி ஆடவே!
பண்பாடும் பைந்தமிழும்
பழமை பேணி நிற்கவே!
விண்ணோடு முகிலாடி
விந்தை பல செய்யவே!
அன்ன நடையோடு பெண்கள்
ஆர்ப்பரித்து நிற்கவே!

10.

அலை கடலைப் போல மக்கள்
ஆர்த்து அங்கு கூடவே!
மலையகத்து மக்கள் வந்து
மலர்கள் தூவி நிற்கவே!
நிலை உணர்ந்து மன்னன்சற்று
நாச்சன் முகம் நோக்கவே!
கலை விளங்க வன்னி மண்ணும்
காட்சி தந்து நின்றதே!

11.

இல்லை என்ற சொல்லு ஒன்று
இல்லை வன்னி மண்ணிலே!
தொல்லையற்று மக்கள் வாழ
தொடரும் வழிகள் செய்யவே!
கல்வி ஓங்கி நன்மை பேணி
காதலோடு வாழ்ந்தனர்!
நெல் விளைந்து வன்னி மண்ணின்
நேர்த்தி சொல்லி நிற்கவே.



படிப்பகம்

www.padippakam.com

# நேருக்கு நேர்

## (விடியலைத் தேடி திரைப்படத்திற்கான நேர்காணல்)

தமிழீழம், தமிழர் புலம் பெயர்ந்து வாழும் மேலைத்தேசம் என்ற பின்னணியில் உருவான திரைப்படமே... திரு . அருளானந்தராஜா அவர்களின் விடியலைத் தேடி...

தமிழீழம்....... கடல் தொழில் புரியும் மக்கள் வாழும் கிராமத்தில் இராணுவத்தின் சுற்றிவளைப்பு...........

பிழைப்புக்காக கடல் செல்வோர் பிணமாகி கரை ஒதுங்குவது......

போராளிகளை காட்டிக் கொடுக்க மறுக்கும், சிங்கள இராணுவத்தின் முற்றுகைபற்றி தகவல் தரும், உயிர் போகும் தருவாயில் உண்மையை வெளியிடாத கிராமத்தவரின் நெஞ்சுரம்.........

சிங்கள இராணுவத்திற்கு பலியாவதைவிட புலியாகி வீரச்சாவை விரும்பி ஏற்க வரும் கிராமத்தவரின் உணர்வு.......

பாச உணர்வுகளை அடக்கி விடுதலை உணர்வை நெஞ்சில் நிரப்பி துப்பாக்கி ஏந்திக்கிளம்பும் வீர வேங்கைகள்.......

அந்த வேங்கைகளின் வீரச்சாவுகள் வீரவரலாற்றின் நினைவுத் துளிகள்.......

தொழில் செய்வதால் பாரம்பரியமாக இருந்துவந்த வர்க்க பேதத்திற்கு சாவுமணி அடிக்கும் முகமாக போராட்ட சூழ்நிலை மக்களை ஒரினமாக்கி வரும் நிலைப்பாடு.......

**மேலைத்தேசம்**.....புலிகளின் பேரை சொல்லி தஞ்சம் கேட்டு பாதை மறந்து வாழும் பச்சோந்திகள்.......

வெளிநாட்டின் சொகுசு வாழ்கையில் ஊரை மறந்து செய்யும் எதிரான பிரசாரங்கள்.......

வெளிநாட்டுக்கு வந்து விட்டவர்களின் வீடுகளை புலிகள் அபகரித்து விட்டார்கள் என வீண் புரளி கிளப்புவோர்.......

படிப்பகம்

www.padippakam.com

குடித்து வெறித்து குதூகலமாக வாழவே மேலை நாடுகளுக்கு வந்தோம் என்று தம்மை மறந்து வாழும் தனது நண்பர்கள் மத்தியில் புலிப்பிரச்சாரத்திற்கு புறப்படும் ஓர் இளைஞன்.......

மறைத்து மது அருந்தி மகா உத்தமனாகி ஆளுக்கு தக்கபடி கதை அளப்பவர்கள்.......

நிதி சேர்க்க வரும் போது ஓடி மறைந்து கொள்ளும் கணவனை மனைவியே கண்டிப்பது.......

திரு. அருளானந்தராஜா அவர்களின் நேரிய பாதையை இந்தப் படம் துலக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழீழத்தில் இருந்து வெளியான புலிகளின் பிரச்சார ஒளி நாடாக்களில் ஏற்கனவே பார்த்த சில காட்சித் துண்டுகளை இப்படத்தில் அவர் காட்சிக்கு தக்கபடி விறு விறுப்பாக இணைத்திருப்பது அவரது திரைப்பட அனுபவத்தை எடுத்துக்காட்டுகிறது. எமது அரும்பு சஞ்சிகை சார்பில் விடியலைத் தேடி பேட்டிக்கான தொலைபேசியில் நேரத்தை குறித்து விட்டு **12. 05. 95** மாலை திரு. அருள் அவர்களது வீட்டிற்கு சென்றேன்

வீட்டினரின் இன்முக வரவேற்பு அருள் அவர்கள் முத்தமிழ் விழா ஒழுங்கு அலுவலுக்கு சென்றதால் அவர் வரும் வரை மேற்படி படத்தை பார்த்து கொண்டு இருக்கும் படி கேட்டுக் கொண்ட அவரது பிள்ளைகள் படத்தை போட்டு விளக்கமும் தந்து கொண்டிருந்தார்கள்.

திரைப்படம் முடியும் தறுவாயில் அருள் வந்தார்.






படிப்பகம்

www.padippakam.com

அருள்: வணக்கம் ஞானம்

ஆசிரியர்: வணக்கம்! பேட்டியை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன் இப்படத்தை உங்கள் சொந்த செலவிலா எடுத்தீர்கள் ?

அருள்: ஆம். எனது சொந்த செலவில் தான்

ஆசிரியர்: விடுதலைப் புலிகள் கலாச்சார பிரிவு என்று வருகிறதே... அவர்களின் உதவியுடன் இது எடுக்கப்பட்டதா ?

அருள்: எனது சொந்த தயாரிப்பான இப்படத்தை விடுதலைப் புலிகளின் கலாச்சார பிரிவு ஊடாக வெளியிட்டிருக்கிறேன்

ஆசிரியர்: இந்த விடியலைத் தேடி என்ற படத்தில் அதிக வர்ணனை யான வசனங்கள் இல்லாமல், வசனங்கள் நேரிடையாக பேசப் படுகின்றதே அதற்குரிய காரணத்தை நான் அறியலாமா ?

அருள்: மக்களுக்கு சொல்ல வேண்டியதை இலகுவான வழியில் சொல்வதற்கும் யதார்த்த மான வசனங்களுக்கு முக்கியத்வம் கொடுப்பதற்காகவும்.

ஆசிரியர்: இப்பட நடிகர்களை எல்லா இடங்களில் இருந்தும் தெரிவு செய்தீர்களா ?

அருள்: ஆம் எல்லா இடங்களிலிருந்தும் தெரிவு செய்திருக்கிறேன் எல்லா நண்பர்களும் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள்

ஆசிரியர்: டென்மார்க்கில் நீங்கள் நடித்த முதலாவது நாடகம் எது ?

அருள்: காலச் சூழலில் ஈழத் தமிழர்கள் என்ற நாடகத்தை நடித்தேன்

ஆசிரியர்: ஈழத்தில் திரைப்பட அனுபவம் அல்லது நடித்த அனுபவம்?

அருள்: நான் ஈழத்தில் நடித்த படம் துருவ நட்சத்திரம்

ஆசிரியர்: அதுவும் கலாச்சாரப் பிரிவுப் படமா அல்லது ஏதாவது நிறுவன தயாரிப்பா ?

அருள்: திரு. நாராயணசாமி என்பவர் தயாரித்த படம்

ஆசிரியர்: உங்களுக்கு நாடகத்தில் மிகவும் ஆழ்ந்த ஈடுபாடு என அறிகிறேன் உங்கள் நாடக அனுபவம் எந்தவயதில் இருந்து என்பதை குறிப்பிட முடியுமா ?

அருள்: எனது 10ம் வயதில் பாஞ்சாலி சபதம் என்ற மகா பாரதக் கதையை தழுவிய நாடகத்துடன் எனது நாடக பிரவேசம் ஆரம்பமானது காதல் சின்னம் என்ற நாடகத்தை 14 வயதில் நாடகப் போட்டிக்கு மேடை ஏற்றி முதலாவது இடத்தைப் பெற்றது



படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர்: நீங்கள் நடித்த வேறுநாடகங்களை குறிப்பிடமுடியுமா ?

அருள்: புதிய தீர்ப்பு, பாசதீபம், தியாகம், இருகொலைகள், செம்மனச் செல்வி, பண்டாரவன்னியன், சாம்பிராட் அசோகன், சங்கிலியன், குமணன், வீரசிவாஜி, பொன்னகரம், திருப்பம், விதியின்விழிம்பில், கர்வபங்கம், கண்திறந்தது, விடிவகால நடிசத்திரம், காலத்தை வென்றவன், யாத்திரை, அணையாத்தீ, தர்மயுத்தம், சுதந்திரதாகம், மண்குதிரை, என 50 க்கு மேற் பட்ட இதிகாச புராண சமூக நகைச்சுவை சரித்திர நாடகங் களை பல நூற்றுக்கணக்கான மேடையில் நடித்துள்ளேன். நான் நடித்த நாடகங்களில் நானே இயக்குனர் பொறுப்பை ஏற்றுக் கொள்வேன். நான் எழுதிய சொந்த நாடகங்களிலும் வேறு கதாசிரியர்கள் எழுதிய நாடகங்களிலும் நடித்துள்ளேன்

ஆசிரியர்: வேறு நாடுகளில் உங்கள் நாடகங்கள் மேடைஏற்றப்பட்டிரு-க்கிறதா ?

அருள்: நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் மேடையேற்றப்பட்டிரு-க்கிறது

ஆசிரியர்: நீங்கள் பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகட்கு எழுதுவது உண்டா ?

அருள்: தமிழீழத்தில் பல சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கு எழுதினேன். டென்மார்க்கில் தமிழீழவிடுதலை புலிகளின் வெளியீடாகிய தாயகம் சஞ்சிகையில் தொடர்ந்து எழுதினேன் தற்போது டனிஸ் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்-கிறேன் எதிர்காலத்தில் விடுதலை உணர்வுகளைப் பிரதி பலிக்கும் சில ஆக்கங்களை வெளியிடவுள்ளேன்.

ஆசிரியர்: தற்போது ஐரொப்பிய நாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகள் பற்றி என்ன கருதுகிறீர்கள் ?

அருள்: அறிவு ஜீவிகள் என்ற தோரணையில் சில சஞ்சிகைகள் மிகவும் படித்தவர்களுக்காக என்று கதை கட்டுரை கருத்துக் களை வெளியிடுகிறார்கள். சாதரணமக்கள் பற்றிச் சிந்திக் கிறார்கள் இல்லை இன்றய சூழலுக் கேற்ப மக்களின் யதா-ர்த்த உணர்வுகளைப் புரிந்து எழுத்தாளர்கள் தங்கள் கருத்-துக்களை தாயக மண்ணின் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு இன்றைய காலகட்டத்தில் தாயக உணர்வுள்ள ஆக்கங்கள் கட்டாயமாக எழுதப்படவேண்டிய ஒன்றாகும்

ஆசிரியர்: எமது அரும்பு சஞ்சிகை பற்றி ஏதாவது கூற முடியுமா ?

அருள்: மிகவும் தரமான சஞ்சிகை, சிறுவர்களைக் கருத்திற் கொண்டு வெளிவருவது போற்றத்தக்கது எங்கள் தேசத்தின்

www.padippakam.com

நிலையை புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கு மேலும் எடுத்துக் கூறவேண்டும் அரும்பு தொடர்ந்து வளர எனது நல் வாழ்த்துக்கள்.

திரு. அருள் அவர்கள் ஓர் சட்ட மாணவன் தமிழீழ விடுதலை உணர்வு மிக்கவர் சிறந்த மேடைப் பேச்சாளர் நடிகர் கலைஞர் வசனகர்த்தா திரைப்படத் தயாரிப்பாளர் என்ற தகுதிகளைத் தாங்கிடும் அவர் தனது விடியலைத் தேடி திரைப்பட வெற்றி தனது சக நடிகர்களின் கலைஞர்களின் ஒத்துழைப்பால்தான் சாத்தியமானது என்று அடக்கமாகக் கூறிக் கொள்வது அவரது பெருந்தன்மையைக் காண்பிக்கிறது

<u>அவருக்கு ஒத்துழைப்புத் தந்த நடிகர்கள்</u>.

தெ. சுகெந்திரா, க. ஐங்கரன், ர. ரவி, அ. சிறிகாந், க. ஆனந்தன், ம. ஆரொக்கியநாதன், க. மனோகரன், அ. செல்வக்கதிரமலை, இ. இராஜன், தொ. யோசப் அல்பிரட், சி. பாஸ்கரன், கூ சோதிலிங்கம், மகேசன், சிறி, சேகரன், இரத்தினவேல், தியாகு, உதயச்சந்திரன், ரமணா, கணேஸ், சிவா, பிரபா, நாகேந்திரம், பத்மநாதன்
செல்வன் தி. அருள், செல்வன் ச. அரவிந், செல்வன் ம. சங்கர், செல்வன் ம. சஞ்சீவி, செல்வன் ந. ஆதவன், செல்வன் செ. தவச்செல்வன், செல்வி ரா. சில்லியா, திருமதி த. கனகமணி, திருமதி ம. புஸ்பராணி, திருமதி செ. வசந்தா, திருமதி ச. ஞான, திருமதி அ. குமுதினி, திருமதி ரா. அன்ரோனியா, செல்வி அ. நிசாந்தினி, செல்வி வ. சுகன்யா, செல்வி ச. கிருஸ்ணி

இசை: வ. உமா, அ. ஜெயசீலன்
நடனம்: திருமதி சு. சுமித்திரா, திருமதி ச. மாலா
கதை வசனம் தயாரிப்பு: சு. தி. அருள்
ஒளிப்பதிவு: ப. விமல்

அரும்புக்காக அருள் அவர்கள் தந்த பேட்டியை ஏற்றுக்கொண்டு நன்றி கூறிக்கொண்டு வெளியேறுகிறேன்.

பேட்டி கண்டவர்
ஆசிரியர்
அரும்பு



படிப்பகம்

www.padippakam.com



# சிறுபிள்ளை வேளாண்மை

மழலைகள் பேசி மணல் வீடு கட்டி
மண்பாலம் போட்டோம் அந் நாளிலே- நாங்கள்
மண்பாலம் போட்டோம் அந் நாளிலே- அந்த
மணல் வீட்டு வாசலில் மணமக்களாக
மலர்மாலை சூட்டினோம் அந் நாளிலே- நாங்கள்
மலர்மாலை சூட்டினோம் அந் நாளிலே!
அப்பா நான் அம்மா நீ என்றாகினோம்- அதில்
தப்பேதும் காணாமல் விளையாடினோம்.
மரப்பாவை ஒன்றை எம் மகளாக்கினோம்- அதை
மணல் வீட்டுத் தொட்டிலில் தாலாட்டினோம் (மழலைகள்)
கடல் சிப்பி ஒன்றை எம் கலமாக்கினோம் – அதில்
கல்லையும் நீரையும் சோறாக்கினோம்
உணவுண்ட களை தீர இளைப்பாறினோம் – இந்த
உலகத்தில் இல்லாத சுகமாகினோம்
மணல் வீடும் தொட்டிலும் மண்பாலமும்- நெஞ்சில் வாடாத மலர்மாலை மரப்பாவையும்
வீடெங்கும் சேராத வேளாண்மையோ- எங்கள்
விளையாட்டுக் கலியாணம் வீணானதோ (மழலைகள்)


கவிஞர் பாரதிபாலனின்
கவிதைக் கனவுகள் நூலில் இருந்து



படிப்பகம்

www.padippakam.com

# இலட்சிய ஏழைகள்



தாய் மண்ணை
மறந்திட்ட
உள்ளமும்
பெற்ற தாயைத்
தந்தையை
மறந்திட்ட
பிள்ளையும்
நெற்றிப்
பொட்டை
மறந்திட்ட
சுமங்கலியும்
பெண்ணின்
பண்பாட்டை
மறந்திட்ட
மங்கையும்
பிள்ளைக்கு
தமிழ் புகட்ட
மறந்திட்ட
பெற்றோரும்
பிள்ளைக்கு
தமிழில்
பெயர் வைக்க
மறந்திடும் தமிழரும்
காலத்தே வயல் உழ
மறந்திட்ட உழவனும்



காலத்தால் ஏழைக்கு
உதவ மறுத்திடும்
பணக்காரனும்
காலம் உணர்ந்து கவிபாட
மறந்திட்ட
கவிஞனும் பிறர்
தியாகத்தை திறமையை
போற்ற மனமில்லாத
மனிதனும்
குடும்பத்தைக் காக்க
மறந்திட்ட தந்தையும்
தாய் ஆகிட தந்தை ஆக்கிட
முடியாத
மனைவியும்
போரில் உடைவாளை
மறந்திட்ட
போர்வீரனும்
நாட்டை நலமுடன்
காக்க மறந்திட்ட
மன்னனும்
ஆயிரம் ஆயிரம்
லட்சங்கள் சேர்த்தென்ன
ஆயிரம் ஆயிரம் பட்டங்கள்
பெற்றென்ன மனித
இலட்சியத்தில்
இவர் ஏழையே! இவர் ஏழையே.

— வேலணையூர் பொன்னண்ணா —

படிப்பகம்

www.padippakam.com



# போட்டாரே ஒரு போடு!

அண்மையில் தமிழகம் சென்றிருந்த திரு. தொண்டமான் அவர்கள் மதுரையில் வைத்து பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இலங்கையில் தமிழ் மக்கள் பல காலமாக சாத்வீக வழியில் போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டம் வெற்றி பெற முடியாத இந்த நிலையில் திரு. பிரபாகரன் தமிழர்களுக்காகப் போராடி வருகிறார். இந்திய விடுதலை வீரன் பகவத்சிங்கிற்கு இணையானவர் பிரபாகரன். பகவத்சிங்கின் கொள்கை தீவிரவாதம் இல்லை என்கிறார்கள் பிரபாகரன் செய்தால் தீவிரவாதமா?

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப போராடுகிறார்கள். பிரபாகரன் தமிழர் நலனைக் கருத்திற் கொண்டு போராடுகிறார் எனக் கூறியுள்ளார். துணிச்சல் மிக்க தொண்டமான் உள்ளதை உள்ளபடி எங்கு வேண்டுமானாலும் கூறுவேன் என ஆணித் தரமாகக் கூறியுள்ளார்.


## விமானப்பயணம்

உங்கள் அடுத்த விமானப்பயணம் குறைந்த செலவிலும், திருப்திதரக்கூடியவகையிலும் அமையவிரும்புகிறீர்களா?

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி இல : 97 214578

குறிப்பாக உங்களிற்கருகாமையிலிருக்கும் Billund, Århus அல்லது Copenhagen விமானநிலையங்களுடாக,நீங்கள் சிங்கப்பூர், கொழும்பு போன்ற வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொண்டு திரும்புவதற்கான பயணசீட்டுக்கள்குறைந்த கட்டணத்தில் பெற்றுத்தரப்படுவதுடன்,வேண்டிய ஆலோசனைகளும் வழங்கப்படும்.

உதாரணமாக தாய்நாட்டிற்கு நீங்கள் விடுமுறையில் செல்லும் வழியில் சிங்கப்பூர், பாங்கொக், கராச்சி, நகரங்களில் தரித்து நின்று வேண்டியபொருட்களை கொள்வனவு செய்யக்கூடியதாக உங்கள் விமானப்பயணத்தை சிறப்பாக திட்டமிட என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.


படிப்பகம்

www.padippakam.com



# அம்மா

ஆக்கம்: ஆரணன்

மாமா வணக்கம் தங்கையின் மகள் பவித்திராக்குட்டி மழலையில் சொன்னதும்தான் நான் என் நிலையை உணர்ந்தேன். கண்களைக் கசக்கியபடியே "வணக்கம்" என்றபடி எழுந்த போது, அம்மா முட்டைக் கோப்பியுடன் வந்து நின்றார். நான் ஓலைப்பாயிலிருந்து எழுந்தேன். நல்லாத் தூங்கினியோ, இங்கு வெளிநாடு மாதிரி பஞ்சு மெத்தையும் காற்றாடியும் இல்லைத்தான், என்ன செய்வது.

ஓம் அம்மா, இது தானே எமது பிறப்புச் சொத்துக்கள் இது தான் என்றைக்கும் உதவும் மற்றயது எல்லாம் இடையில் வந்து போவது கனவு போன்றது, என்று கூறிய படியே அம்மா தந்த கோப்பியைப் பருகினேன். எத்தனை நாட்கள், எத்தனை மாதங்கள், எத்தனை வருடங்களை அந்நிய நாட்டில் கழித்து விட்டு இப்போது தான் சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளேன். எனக்கு அங்குள்ளயாவுமே புதுமையாகத் தென்படுகின்றன. அம்மாவிடம் கோப்பியைக் குடித்து விட்டு கிளாசை நீட்டியபடியே அம்மாவின் தோற்றத்தை அவதானித்தேன். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்த அம்மாவுக்கும் இப்போது நான் காணும் அம்மாவிற்கும் இருக்கும் வித்தியாசத்தை எண்ணிப் பார்க்கலானேன். அப்பாவின் நோய் எமது உடமை இழப்புகள் என்பன இன் நிலைக்கு காரணங்கள். நான் சிறுவனாக இருக்கும் போது அப்பா பாரிசவாத நோயினால் படுத்த படுக்கையானார். அதன் பின்பு எல்லாமே அம்மா தான் எனது கண்கள் பனித்தன,

எனது மனதிற்குள் ஏதோ ஊர்வது போன்ற பிரமை. அடிக்கடி நடக்கிற தாக்குதலுக்குப் பயந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இழந்ததை நாளை பெறலாம் பிள்ளைகள் உயிருடன் இருந்தால் காணும் என்ற எண்ணத்தில் பதுங்கு குளியினுள் தஞ்சமடைவதும், அதற்கும் மிஞ்சி விமானத்தாக்குதல் கூடுதலாக இருந்தால் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு ஓடுவதும் தான் யதார்த்தம்.


படிப்பகம்


www.padippakam.com

இப்படியாக பலாலியிலிருந்து தெல்லிப்பளை பின்பு அங்கும் தாக்குதல் வர உடுவில், சாவகச்சேரி என்று மாறி மாறிக் குட்டி போட்ட பூனை மாதிரி கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு அலைவது தான் வழமை. அம்மா நல்லாக வயக்கெட்டுப் போனா, எழுந்து கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்றேன்.

அப்போது எங்கோ வானைப் பிளக்கும் சத்தம் கேட்டது. நான் ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தேன் இரண்டு குருவிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பறப்பது போல இரண்டு சியாமாச் செட்டி பொம்மர்கள் விமானங்கள் தென்பட்டன. மருமகள் பவிக்குட்டி மாமா மாமா பொம்மர் வந்து விட்டது குண்டு போடப்போகின்றது வாங்கோ பதுங்கு குளிக்குள் என்று கத்திய வண்ணம் அம்மாவிடம் தஞ்சமடைந்தாள்.அம்மா பதுங்கு குளியினுள் பேத்தியை விட்டு விட்டு வாசலில் என்னை உள்ளே வரும்படி அழைத்தாள். பொம்மர்கள் இரண்டும் குத்துக்கரணம் அடித்து ஆகாயத்தில் சகாஜம் காட்டின. பின்பு ஒரு விமானம் ஐந்தாறு சீன வெடிகள் ஒன்றாக வெடிப்பது போல விட்டு விட்டு சத்தங்கள் கேட்டன.

நான் பதுங்கு குளி வாசலில் இருந்தேன் எனக்கு எல்லாமே புதுமையாக இருந்தது. பக்கத்து வீட்டு சிறுவர்கள் இருவர் இது ரொக்கட் தாக்குதல் குண்டு போடவில்லை என்றபடி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சில நிமிடங்களின் பின் எங்கள் வீட்டிற்கு தெற்குப் பக்கமாக உள்ள வீட்டின் மேலால் பொம்மர் தாழப் பறந்து சென்றது. அங்கு சென்ற சிறுவர்கள் குத்துகிறான் குண்டு போடப் போகிறான் என்று கத்திக் கூக்குரலிட்டுக் கொண்டு வடக்குத் திசை நோக்கி ஓடினார்கள். கண் இமைப் பொழுதில் குண்டு ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்தது.

அம்மாவும் தங்கைமாரும் வேண்டாத கடவுளே இல்லை. ( நான் உணர்ந்தேன் எமது உடன்பிறப்புக்களும் சகோதரங்களும் படும் அவலத்தை நினைத்துப் பார்த்தேன்.) வெளிநாட்டில் நம்மவர்கள் செய்யும் மண விழாக்களையும் பிறந்த நாள் கொண்டாட்டங்களையும் நினைத்துப் பார்த்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

அந்நிய நாட்டில் அகதிகள் என்று அரசாங்கம் கொடுக்கும் உதவிப் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் எம்மவர்கள் படும் அவலம் சொல்லணாத்துயர். இப்படியாக மனம் எண்ணியபடி இருந்த போது பக்கத்து வீட்டின் அழுகுரல் கேட்டது. எல்லோரும் சத்தம் வந்த திசைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். முன்பு பொம்மர் குண்டு போடுகிறான் என்று கத்திய சிறுவர்கள் அவன் போய்விட்டான் என்று கூறியபடி அழுகைக் குரல் கேட்ட வீட்டிற்கு விரைந்தனர். நானும் அம்மாவும் அவ்வீட்டிற்குச் சென்றோம்.

அவ்வீட்டினுள் தாயும், தகப்பனும், மகனும் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். மகள் மட்டும் சமையலறைத்தட்டின் கீழ் இருந்த படியால் உயிர் தப்பி விட்டாள். அவள் அம்மாவைக் கண்டவுடன் என்னைத் தனியே தவிக்கவிட்டு எல்லாரும் போய்விட்டார்கள் என அழுதாள். அம்மா ஆறுதல் கூறினாள். தந்தையின் மண்டை சிதறிப் போய் இருந்தது. தாயின் வயிற்றுப் பகுதியினுள் குண்டு துளைத்திருந்தது. மகன் அம்மா என முனகிய வண்ணம் கண்கள் பிதுங்கிய நிலையில் படுத்திருந்தான். அந்தத் தாய் அந்த நிலையிலும் மகன் எங்கே என்று கேட்டு அழுதாள்.

சில மணி நேரத்தின் பின் தெரிந்த ஒருவரின் லொறியில் அவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். அவர்களுடன் நானும் அம்மாவும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கு கொண்டு சென்று இரண்டு மணித்தியாலத்தில் மூவரின் உயிரும் பிரிந்தது. நாங்கள் திரும்ப இறந்த உடல்களுடன் வீடு வந்து சேர்ந்தோம். அவர்களின் இறந்த உடல்களை மகள் கட்டிப்பிடித்து அழுதாள். அவர்களின் மரணச் சடங்கை அம்மாவும், நானும் முன் நின்று நடத்தினோம். இப்படியாக அந்த அவல வாழ்க்கையில் நாட்கள் நகர்ந்தன. நான் கனடா போகப் போவதற்கான நாட்கள் நெருங்கியது, எனது மருமகள் குட்டியும் நீங்கள் போகப் போகிறீர்களா எனக் கேட்கத் தொடங்கினாள்.

அம்மா கூறினாள் நீ பத்து வருடங்கள் கழித்து விட்டு வந்திருக்கிறாய் திருமணத்தை முடித்து விட்டு போகும்படி நானும் என்னுள் யோசித்தேன். அந்தப் பக்கத்து வீட்டு நங்கையைப் பற்றி மனம் எண்ணத் தொடங்கியது. அவளைத் திருமணம் செய்தால் என்ன? அவளைக் கனடா கூட்டிச் சென்றால் அவளின் மனதுக்கு ஆறுதலாக இருக்கும் என்று என்று சிந்தித்தேன். இப்படியாக நாட்கள் நகருகையில் அம்மா தரகர்கள் மூலம் பெண்பார்த்தாள். நான் அப்போது எனது உள்ளக்கிடங்கைக் கூறி நான் காயத்திரியைத் திருமணம் செய்யப் போகிறேன் என்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

அம்மாவிடம் தங்கை கூறினாள் அவர்களிடம் ஒரு சீதனமும் இல்லை வேறெங்காவது என்றால் ஐந்து இலட்சம் காசும் கொழும்பில் வீடும் வாங்கலாம் என்றாள். அதற்கு எனது தாய் மகளே நாம் பிறக்கும் போது எதுவும் கொண்டு வந்தது இல்லை, இறக்கும் போதும் ஏதும் கொண்டு போவதில்லை. ஆனபடியால் நாங்கள் அந்தப் பிள்ளை காயத்திரியையே திருமணம் செய்து வைப்போம் என்று கூறினாள். நான் எனது மனதினுள் சீதனத்திற்காக தமது மகன் மாரை சந்தையில் விற்பது போல் விற்கும் தாய்மாருடன் எனது அம்மாவை ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

அடுத்த நாள் அம்மா காயத்திரி வீட்டிற்கு சென்று பெண் கேட்கிறாள், அவளுக்கு ஒரு சிறிய தந்தை மட்டும் இருப்பதாகவும் அவரிடம் கேட்கும் படியும் சொல்கின்றாள். அம்மா சிறிய தந்தையிடன் கதைத்து அனுமதியும் வாங்கி விட்டாள். நான் மனதில் அம்மாவை நினைத்தபடியே குட்டித்தூக்கம் போடுகிறேன். அப்போது பக்கத்து வீட்டுப் பெண்கள் இருவர் காயத்திரிக்கும் அன்னத்தின் மகனுக்கும் கலியாணமாம் என்ற பேசியபடி தெருவில் நின்றார்கள். நான் அவர்களின் கதையைக் கேட்டவண்ணம் கண்ணயர்ந்தேன். அவர்கள் இந்த அன்னத்தின் மனம் மாதிரி யாருக்கு வரும் காயத்திரி அதிஸ்டசாலி என்று கூறியபடி நகர்ந்தனர். எனக்கு அம்மா எங்களை வளர்க்கப்பட்ட கஸ்டம் என்னை விலைப் பொருளாக விற்காது தன்மானமுள்ள இரக்கமுள்ள மனிதனாக நிற்க வைத்தது போன்ற நினைவுகளில் மூழ்கியது.

நான் நாளை கனடா பயணம் என்று தீர்மானிக்கப்பட்டது. அம்மா காயத்திரியிடம் ஒரு குண்டுசி அளவு பொன்னும், பொருளும் வாங்காது தனது மகனைக் கொடுக்கச் சம்மதித்தாள். பயண நாள் என்று அம்மா காயத்திரி வீட்டிற்குச் சென்ற அவளை அழைத்து வந்து தனது நகைகளை அணிவித்து சாமிப்படத்தின் முன்பு எங்கள் இருவரின் கைகளையும் சேர்த்து வைத்தாள். நான் சந்தோச மிகுதியினால் அம்மாவைக் கட்டிப் அணைத்து முத்தமிட்டேன். அம்மா எங்கள் இருவரையும் வாழ்த்தி வழியனுப்பி வைத்தாள். நான் வாசல்வரை வந்து அம்மாவின் கலங்கிய கண்களை சந்திக்க முடியாமல் காரினுள் ஏறினேன். கார் ஓடத் தொடங்கியதும் எனது மனம் அம்மா என்றால் எங்களை வளர்க்க தன்னை உருக்கியவள் தெய்வம் என்றாலும் தகும். என்று எண்ணத் தோன்றியது.

(யாவும் கற்பனையே)

தேன் தமிழ்

கடவுள் நமக்குள் தங்கியிருப்பதால் ஏற்படும் எதிரொளியே மகிழ்ச்சியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## பிரச்சார வாகனம்

உணர்வற்ற
தமிழனுக்கு
சிந்தனை
சீட்டிலும் வட்டியிலும் தான்
என்று
கந்தையா வாத்தியார்
புத்தகம் எழுதிவிட்டார்.....
புத்தகம்
அச்சாக வேண்டுமே?
இம்மாதம் சீட்டு
வாத்தியாருக்குத் தானாம்!
மனுசன் போன சீட்டுக் காசில் எடுத்த
"கொண்டா"
வாகனத்தில்
சுதியாய்க் கிளம்புகிறார்..... புத்தகத்தையும்
அச்சு வாகனம் ஏற்ற வேண்டுமாம்!

கவிஞர் துறையூரான்.

# நீங்கள் தெரிந்து கொள்ள....

பறவைகளில் அதிக நாட்கள் முட்டைகளை அடைகாக்கும் பறவை பல்மர் அது 56 நாட்கள் அடைகாக்கும்.

## அற்புதம்



கடலில் வாழும் பிராணிகளில் திமிங்கிலம் குட்டி போட்டு பால்கொடுக்கும் பிராணியாகும். திமிங்கிலங்கள் 5டன் எடை வரை இருக்கும். குட்டி 3டன் எடை இருக்கும். கடலில் தண்ணீருக்கு மேலே வந்து தான் சுவாசிக்கும். கடற் கரைக்கு வந்து விளையாடுவது மிக விருப்பம், அவை மீன்களை உண்டு உயிர் வாழ்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

# வேடதாரி

எண்ணங்களால்
சோரம் போனவன்
எழுதுவோன்
கரங்களை
என்ன
தைரியம்?
என்றானாம்.
உனது
நிர்வாண
விழிகளுக்கும்
நெஞ்சில் இருந்து
பிறக்கும்
வார்த்தைக்கும்
கணைக்சன்
துண்டிக்குப்
பட்டதால்
இருட்டிலே
தடுமாறுகிறாய்.....
அறிவிலியே!
என்றானாம்
எழுத்தாளன்
அறிவிலியின்
உள்மனம்
அடித்துக்
கொண்டது
ஓ.....
பரிநிர்வாண
தீட்சை
என்கிறது
இதனைத் தானோ?.....

சமூகக் கூச்சம்
அதனை
என்ன
செய்ய?

-விசுவா மித்திரன்-



படிப்பகம்

www.padippakam.com

1991 ம் ஆண்டு யூன் மாதம் 12ம் திகதி ஒரு தலை சிறந்த தமிழ் ஆசானை இந்த உலகம் இழந்தது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் தமிழாற்றலும், ஆர்வமும் கொண்ட மாணவர்கள் நூற்றுக் கணக்கானோரை உருவாக்கிய கவிஞர் செ. கதிரேசம்பிள்ளையின் மரணம் அன்று நிகழ்ந்தது.



# வயற்காற்றுச் சுமந்து வரும் வளமான தமிழ் மண்

விஜயேந்திரன்

மகாஜனக் கல்லூாயின் வரலாற்றில், தமிழ் ஆற்றல் மிக்க பலர் உருவாகியுள்ளனர். இவர்கள் உருவாக்கும் வகையிலான இலக்கியச் சூழல் கல்லூரியில் நிலவ, கல்லூரியை நிறுவிய பாவலர் துரையப்பாபிள்ளை மட்டுமன்றிக் காலம் காலமாக கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களும் காரணமாக இருந்தனர். கவிஞர் செ. கதிரேசம்பிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்க இடம் வகித்தவர்.

நிமிர்ந்த நடையும் நேர்த்தியான வெண்ணிறமான தேசிய உடையுமாய் கல்லூரி வளாகத்தினுள் உலாவிவரும் அவரது கம்பீரமான குரல் இப்போதும் என் செவிப்பறைகளில் மோதிக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கற்பித்தல் பணம் பண்ணும் ஒரு காரியமாகத் தொடங்கிய பின்னரும் சில ஆசிரியர்கள் தம்மை மாணவர்களுக்காக அர்ப்பணித்தனர். இவர்களது வாழ்வு பெரும்பாலும் கல்லூரியையோ அல்லது அவர்கள் கற்பித்த கல்வி நிறுவனங்களையோ சுற்றியே இருக்கும். அவ்வாறு வாழ்ந்தவர் கதிரேசர்.

பாடசாலை தொடங்கும் நேரங்களில் கலகலத்து வரும் மாணவர்கள், அவரது சைக்கிள் அருகில் வருகின்ற போது மௌனம் கொள்வர். மௌனமாகவும் கம்பீரமாகவும் கடந்து போகிற அவரைப் பார்க்கிற மாணவர்களுக்கு அமைதி பூண்ட தமிழ் பாட வகுப்பறைகள் நினைவு வரும். மாணவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதில் அவரது பண்பு உயரியது. தான் புறவாழ்விலும், கல்லூரியிலும் கொண்டிருந்த ஒழுக்கக் கோட்பாட்டை மாணவர்கள் பின்பற்ற வழிகாட்டியவர் அவர். இதற்காக அவர் பூண்டிருந்த கண்டிப்பு வேடத்தினுள் கருணை உயிர்ப்போடிருப்பது கல்லூரியின் கலை இலக்கியத் துறைகளில் தானே ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் அவர். இதிகாசங்களில் குறிப்பாக மகாபாரதத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆற்றலும் இணையற்றவை. அவரது வகுப்பறைகளில் இதிகாசக் கதாபாத்திரங்கள் உயிரோடியங்குபவை.



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்கள் தாமே காதாபாத்திரங்களாக மாற வழிசமைத்த அவரது நாடகங்கள் ஐந்து அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தொடர்ச்சியாக முதலிடம் பெற்றுக் கல்லூரிக்கு புகழ் ஈட்டித் தந்தவை. மகாபாரதத்தின் கிளைக்கதைகளைப் பின்னணியாகக் கொண்ட இந்த நாடகங்களை "பாரதம் தந்த பரிசு" என்ற பெயரில் நாடகத் தொகுதியாக்கிப் பெருமை கண்டனர் அவரது பழைய மாணவர்கள். இது தவிர அவரது மிக நீண்ட கால இலக்கிய வரலாற்றில் அவர் படைத்த படைப்புக்கள் பல தொகுக்கப்படாமல் உள்ளன. இதை இன்றைய சூழலில் யார் செய்யப் போகிறார்கள்?

யுத்தம் வாழ்வாகிப் போன இன்றைய யாழ்ப்பாணச் சூழலில் நோயுற்றிருந்த ஆசிரியரின் மரணம் நிகழ்ந்தது. அவரது வாழ்வு உரிய முறையில் கௌரவிக்கப்படும் வாய்ப்பு இல்லாத நிலையில் இந்த மரணம் நிகழ்ந்தது துயர் தருவது. உலகம் எங்கும் பரந்து வாழும் அவரது மாணவர்கள் மட்டுமே அவரை நினைவுகூர்தல் இயலும்.

மறக்கப்பட்ட பல மரணங்களுக்குள் ஒன்றாக இந்த மரணமும் ஆகிவிடாது. தமிழ் மணக்கும் அந்தக்குரல் அம்பனை வயல் வெளிகளில் எப்போதும் நிறைந்திருக்கும். கடந்து போகும் வண்டிற் சத்தங்களும், சூடடிக்கும் உழவர்களின் ஓசையும் அதற்கு அணி சேர்ப்பன.

நன்றி சுவடுகள்
நோர்வே

## ஞான ஒளிக்கீற்று

ஞான உபதேசம் செய்த ஞானி தன் சீடனிடம் கேட்டார் அசையாத ஜீவன் பறக்குமா? அசையாத ஜீவன் எப்படி ஐயா பறக்கும்! அது தான் அசையவே அசையாதே என சீடன் திருப்பிக் கேட்டான். ஞானி சொன்னார், இதோ அந்த முட்டையைப் பார்! அது அசைகிறதா இல்லை: அது அடைக்கப்பட்டு குஞ்சாகப் பொரித்துபின்பு வளர்ந்து பறக்குமா? பறக்காதா சொல்!

சீடன் ஆச்சரியத்தோடு அந்தமுட்டையை ஞானியின் கையிலிருந்து வாங்கினான். இது எதனுடைய முட்டை என்று கேட்டான். ஞானி சொன்னார் இது ஒருஇராஜாளி கழுகின் முட்டை. அப்போது சீடனின் கையிலிருந்த அந்த முட்டை அசைவது போல இல்லை அது அவனின் கையிலிருந்து பறப்பது போல அவனுக்குத்தோன்றியது அடக்கத்தின் பொருளடக்கம் சீடனைப் புல்லரிக்க வைத்தது.

படிப்பகம்

www.padippakam.com

# புகழ்

-குலம்

புகழைப் போதை என்பார்கள்.

அது தவறு.

மாலைப் போதை காலையில் தெளியும்

புகழ்ப்போதை தெளியாது

அந்தப் போதை புகழ் இறக்கும் போது இறங்கும்

அல்லது உயிர் போகும் போது போகும்

புகழ் பெற்ற மனிதர்கள் சொல்லும் பொய்யெல்லாம் பொன்னாகும்.

புகழில்லாத மனிதர்களிடம் உண்மையும் மண்ணாகும்

"நிலவு என்பது ஒரு மண்டலமல்ல, அது ஒரு வகையான வெள்ளிப்பாளம்" என்று புகழ் பெற்றவன் சொன்னால்-

"இருந்தாலும் இருக்கம், தெரியாமலா சொல்வார்" என்று ஊரில் பேசிக் கொள்வார்கள்.

இன்னொருவரால் அல்லது பலரால்

சூட்டப்பபெறுவதுதான் புகழ்.

ஆனால், தனக்கென்று புகழைத்தானே உற்பத்தி செய்துகொள்ளும் வேடிக்கை மனிதர்களும் இருக்கிறார்கள்.

தன்னுடைய படத்தை தன் கையிலே தூக்கிக் கொண்டு அலைகிறார்கள்.

புகழ் வந்தால் எல்லாம் வந்து விடுகிறது.

கண்களில் ஒரு தனி ஒளி தோன்றுகிறது.

கை, கால் அசைவில்லாமல் பொருள் வருகிறது.


நாடு முழுக்க அறிமுகமாவது புகழா?

இல்லை!




www.padippakam.com

காந்தியையும் நாடறியும், கோட்சேயையும் நாடறியும்.
இருவர் பெற்றதும் புகழ்தானா?
சிலர் அப்படித்தான் நினைக்கிறார்கள்.
அவர்கள் நம் இரக்கத்திற்குரியவர்கள்.
சரியான அடிப்படையின் மீது கட்டப்பட்ட
மாளிகைதான் புகழ்.



ஒருவனது புகழைவைத்து அவனது அறிவையும்
திறமையையும் எடைபோடும் போது-
அந்தப் புகழை விடத் திறமையும், அறிவும்
அதிகமிருக்க வேண்டும்.
இல்லையென்றால், அது மடமடவென இறங்குவது
தவிர்க்க முடியாததாகிவிடும்.
சந்தர்ப்பங்கள் அவனைக் காட்டிக் கொடுத்து விடும்.
திறமையுள்ளவன் ஒருவன் வந்து விட்டால் உலகம்
அவனை மறந்துவிடும்.
திறமையுள்ளவன் பெற்ற புகழை எவ்வளவு பெரிய சக்தியும்
அழித்து விடமுடியாது.
திறமையற்றவன் வீழ்ச்சியடைவதை எந்த சக்தியும்
தாங்கிப் பிடிக்கமுடியாது.
அதனால் திறமையுள்ள எல்லோருக்கும் புகழ்
வருமென்பது பொருளா?
இல்லை?
(ஜால்ராச் சத்தம் கேட்டாலொளிய பஜனை நடப்பது
ஊருக்குத் தெரியாது
`மேளச்சத்தம் கேட்டாலொளிய திருமணம் நடப்பதை
ஊரறியாது.




படிப்பகம்

www.padippakam.com




அடுப்புக் கரி விற்கிறவள் திடீரென்று அகில
இந்திய நட்சத்திரமாகி விடுகிறாள்
அத்தனையும் மாற்றமடையும் ஆனால்,
பரம்பரைக் குணம் மட்டும் கூடவே வந்து
கொண்டிருக்கும்.
புகழ் பெறுபவர்கள் அதைப் பெற்றுக் கொண்டே
தொடர்ந்து போய்க் கொண்டிருக்க வேண்டும்
வழியில் நின்று எவ்வளவு புகழ் வந்திருக்கிறது
என்று திரும்பிப் பார்த்தால், திரும்பியே போக
வேண்டியதிருக்கும்.

பத்துப் பேர் சேர்ந்து சத்தம் போட்டாலொழிய
திறமையுள்ளவனுக்கே புகழ் கிடைக்காது.)
சிலர் அந்த சத்தத்தையே தங்கள் தகுதியாக்
கருதிக் கொள்கின்றனர்.

அப்படிக் கருதியவர்கள் எல்லாம் கவனிப்பாரற்றுப்
போகும் நிலை வந்தே தீருகிறது.
அவர்கள் கலியாணமாப்பிள்ளை மாதிரி
அவர்களுக்குக் கலியாணம் நடக்கும் போது
எல்லோருமே அவர்களைக் கவனிக்கிறார்கள்
அடுத்த வீட்டில் கலியாணம் நடக்கும் போது
அவர்கள் பத்தோடு பதினொன்று ஆகிவிடுகிறார்கள்
எதன் மூலம் புகழ் வந்தது என்பதை அடிக்கடி
நினைத்துப் பார்க்கிறவன், எப்போதும் அந்தப் புகழுடன்
வாழ்ந்து விட முடியும்
ஆனால் அந்தப் புகழ் அவனை அப்படி நினைத்துப் பார்க்க
விடுவதில்லை

www.padippakam.com



நான் சினிமா உலகத்திலும் இருக்கிறேன்
அது ஒரு வேடிக்கையான உலகம்
அங்கே புத்தியுள்ளவன் என்றால் புகழ் பெறுவான்
என்பது நிட்சயமல்ல
புகழ் பெற்றவனெல்லாம் புத்தியுள்ளவன்
என்பது அந்த இடத்து வேதம்

புகழ் முட்டாள்களின் சமாதி அறிவாளிகளின்
குழந்தை பணக்காரர்களுக்கு வியாபாரப் பொருள்
அரசியல்வாதிகளுக்கு இரும்புத்திரை
கவிஞருக்குப் பரிசு.
வீரர்களுக்கு ஞாபகச்சின்னம் தெளிவும் புகழும்
சேர்ந்து வழர்ந்தால் மனிதன் இறந்தபின்னும் புகழ் வாழும்.
தெளிவில்லாதவன் புகழ் பெற்று விட்டால் புகழ்
முதலில் சாகும்.
சரித்திரம் எவனைச் சுட்டிக் காட்டுகிறதோ
அவனெல்லாம் புகழ் பெற்றவனாக இருந்திருக்கிறான்.
பத்துப்பேரால் மதிக்கப்படுபவன் பெயர்தான்
பரம்பரையாக நிலைத்து நிற்கிறது.
"காதாவழி பெயரில்லாதவன் கழுதை என்பது பழமொழி"
புகழ் என்பது வெளி உலக விளம்பரம் மட்டும் தானா?
இல்லை.

தன்னடக்கம் ஒரு வகைப் புகழ்
மன நிறைவு ஒரு வகைப் புகழ்
நாணய வாழ்வு ஒரு வகைப் புகழ்
அன்பு ஒரு வகைப் புகழ்
ஊமைத்தனம்கூட ஒரு வகைப் புகழ்

அடுத்த இதழில்


படிப்பகம்

www.padippakam.com



# வாசகர் வட்டம்

அரும்பு சஞ்சிகையின் 95க் களின் வளர்ச்சிப் படிமாணத்தில் நவீனத்துவம் பளிச்சிடுகிறது.

வளர்க! வாழ்க!

கவிஞர் ஆதவன்
டென்மார்க்

அரும்பு திரும்பு என்றவர்களை இந்தா கரும்பு என்று விரும்பி அருந்த வைத்த ஆசிரியர் பணியை பாராட்டுகிறேன்.

குயிலன்
டென்மார்க்

அரும்புமூலம் பலரது திறமைகள் டென்மார்க்கில் வெளிவர வேண்டும், அரும்பு முத்திய கரும்பாகி தேடிச் சுவைக்கும் காலம் வந்தது. கடமை தொடர்வோமாக! எனது சிறுகவிதைப் படையல் அரும்பின் ஊக்கத்திற்காக.

கவிஞர்
பொன்னண்ணா
டென்மார்க்

உங்கள் கைவண்ணத்தில் வரைந்த ஓவியங்களை எங்கள் அரும்பு சஞ்சிகைக்கு அனுப்புங்கள் சிறந்த ஓவியமாக இருந்தால் அதற்கான பரிசு ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

தங்கள் சஞ்சிகையில் வெளியான சிறந்த கவிதைகள் நெஞ்சைத் தொட்டன. சிறுகதை இன்னும் வளர வேண்டும். காவியம் நன்றாக இனித்தது. சமையல் சுவைத்தது. கருத்துக்கள் துணுக்குகள் சுவைக்கக் கூடியதாக இருந்தது. குழந்தைகள் உலகம் நன்றாக இருந்தது. எல்லாவற்றையும் காஞ்சிபுரம் பட்டுடுத்தி அழகிய தமிழ் மகள் இவள் என்று அழகூட்டியவர் ஓவியர் சிவா. நல்லவற்றைத் தயக்கமின்றி அறிமுகம் செய்யும் ஆசிரியர் அருணின் பணியை வாழ்த்துகிறேன்.

ஆசிரியர் எஸ் சிறீ
சுவீடன்

அரும்பு மேலும் வளர எனது பணிவான வாழ்த்துக்கள் ஆசிரியர் அருணுக்கு உரித்தாகட்டும்

செல்வி ப. மீனலோஜினி
மேல்பேன் அவுஸ்ரெலியா

அரும்பு உண்மையிலேயே கரும்புதான் அது மேலும் சிறப்பாக வெளிவர எனது நல்வாழ்த்துக்கள் எனது பழைய நண்பனும் சிறந்த கவிஞனுமாகிய கவிஞர் பாரதிபாலன் டென்மார்க்கில் வாழ்வதை அரும்புதான் இனம் காட்டி இருக்கிறது. அதற்காக நன்றி. கவிஞர்களைக் கௌரவிக்கும் அருணின் பணியைப் பாராட்டுகிறேன்.

கவிஞர் கலாநிதி
கனடா


டென்மார்க்கில் தமிழனின் குரல் அரும்பு வடிவத்தில் கண்டு உண்மையில் ஆனந்தப்பட்டேன். உங்களது சஞ்சிகையில் எங்களது ஆக்கங்களையும் அனுப்பி வைத்தால் பிரசுரிப்பீர்களா?

கவிஞர் மோகனப்பிரியா
கொழும்பு

பிற்குறிப்பு:
ஆசிரியர்:- தரமான விடயங்கள் எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக் கொண்டு பிரசுரிப்போம்.


படிப்பகம்

www.padippakam.com



கவிதை

# ஆற்றங்கரையினிலே.....

ஆற்றங்கரையினிலே அழகுமணற்பரப்பினிலே
ஆனந்த மாலையிலே ஆடிடும் சில நினைவுகள்
ஆனந்தக்குடும்பத்தின் ஆசை ராகங்கள்
ஆனந்தலகரியில் ஆறு மலர்ப்பாதங்கள்

சுற்றிச்சுழன்றோடும் சுழல் நீர்ப்பரப்பை
எட்டிப்பிடித்து எம்பிக் குதிக்க
பற்றிய தாயின் கரங்களை உதறி
பரபரப்பதறும் பனி மலர்பாதங்கள்

அகதிக் கரையின் இன்பக்கிளர்வில்
ஆதரவான நெருங்கிய நடையில்
அழுந்தம் பற்றிய வலிந்த கரத்தை
மெலிந்த விரலால் மெதுவாய் விலக்கி
பண்பாடு காக்கும் பதமான கால்கள்

குங்குமக் கோல குறுநகையோடு—அவள்
கண்ணாலே காட்டும் வண்ணம் கண்டு
குறும்பு மின்ன குறுகுறுக்கும் இதயம்
என்னாசைக் கண்ணே என்றின்பத்தில்
கிசுகிசுக்க
தனியிடம் தேடும் தவிப்பான கால்கள்

ஆற்றங்கரையினிலே.....



வேதா. இலங்காதிலகம்
26.6.95
Århus. N

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் பத்திரிகை உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்....

( 1.1.95ல் "வைன்" நகரில் "காகம்" சஞ்சிகை அறிமுக நாள் கருத்தரங்கில் கவிஞர் பாரதிபாலன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)

இந்த சஞ்சிகை அறிமுக விழாவில் பத்திரிகை என்ற தலைப்புத் தந்திருக்கிறார்களே! சஞ்சிகை, பத்திரிகை வாய்ப்படுமா? என்ற கேள்வி என்னுள் எழுந்திட "ஜேணல்" என்ற மூலத்தில் இருந்து பிறந்தவையே பத்திரிகை, சஞ்சிகை என்ற விடையின் ஊடாக தமிழ் உலகம் கையாண்டு வந்த பத்திரிகைத் தரத்தைத் தரம் பிரித்த போது....

பத்திரிகை என்பது செய்திப் பத்திரிகையாக மாத்திரம் நில்லாது திருமணப் பத்திரிகை, சமயப் பத்திரிகை, மருத்துவப் பத்திரிகை, மஞ்சள் பத்திரிகை, குற்றப் பத்திரிகை..... இப்படியாக தமிழ் பத்திரிகை உலகம் கடைவிரிந்திருப்பதைக் காணக் கூடியதாக இருந்திருக்கிறது.

தமிழ்த்துறைத் தொடர்பின் ஆரம்ப காலகட்டத்தில் சஞ்சிகைகூட தொடர் பத்திரிகையாகவே கையாளப்பட்டது.

இந்த நிலையில் ஈழத்தில் சிங்களர் தணிக்கைக்குப் போய் செய்திகளே போட முடியாத கால கட்டத்தில் எமது செய்திப் பத்திரிகைகள் கூட பல கலை அம்சங்களைத் தாங்கி சஞ்சிகைகளாகவே பவனி வந்த கால கட்டத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டுகிறேன்.

அதிலிருந்து இன்னும் பின்னோக்கி செல்வோமே.
இப்போது பிரித்தானியா கொலனிகளில் ஒன்றான *"சிலோன்"* என்னும் எமது "இலங்கை" தென்படுகிறதல்லவா? அந்த இலங்கையில் அன்று ஆங்கிலேயர்களால் படித்தவர்கள் என்று முத்திரை குத்தப்பெற்வர்கள் ஈழத்தமிழர்களே! அதுவும் யாழ்ப்பாணத்தமிழர்களே! அவர்கள் வெள்ளையர்களால் முக்கிய பதவிகளில் அமர்த்தப் பெற்றவர்கள் "எசமான விசுவாசம் மிக்கவர்கள்" என வெள்ளையரிடம் பெயர் எடுத்து விட்டோம் என தங்களுக்குள் பெருமைப்பட்டவர்கள்.

வெள்ளையனோ தமிழர் தம் உளவியலை இவ்வாறு தான் உள்வாங்கி இருக்கிறான். நாட்டுப் பற்று இல்லாதவர்கள், போட்டி பொறாமையில் தனது சொந்த இனத்தையே சாய்ப்பதில் வல்லவர்கள், கோள் குண்டணியில் கெட்டிக்காரர்கள், அடுத்துக் கெடுப்பதில் வல்லவர்கள். இத்தகைய செம்மல்களைப் பதவியில் இருத்தி பலன் அனுபவித்த ஆங்கிலேயன், இந்த தமிழர்களால் பின் நாளில் தமக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற பயத்தினால் தான் போலும் ஈழச் சுதந்திரத்தை சிங்களவருக்கே விட்டு சென்று இருக்கிறான்.

"பத்திரிகை என்ற தலைப்பிற்கும் ஆங்கில, தமிழ், சிங்கள சம்பவங்களிற்கும் என்ன தொடர்பு என நீங்கள் கேட்கலாம். அது குற்றப்பத்திரிகை என்ற தலைப்பில் இடம் பெற வேண்டிய விடயமாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த கால கட்டத்தில் யாழ்ப்பாணத்து நல்லூரில் இடம் பெற்ற சம்பவம் அது. அதனை நிரூபிப்பதற்கு என்னிடம் வரலாற்று சான்றுகள் ஏதும் கிடையாது. கர்ண பரம்பரையாக எனது காதுக் கெட்டிய தகவலே அது.

சபாபதி முதலியார் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேய அரசுக்கு விசுவாசமானவர். அவர் ஆங்கில அரசில் உயர்ந்த பதவியில் அமர்த்தப்பட்டவர். அவரின் மனைவி மீனாட்சி அம்மாள், மீனாட்சி அம்மாளின் அண்ணன் சின்னத்தம்பி முதலியார்.

படிப்பகம்

www.padippakam.com

சின்னத்தம்பி முதலியார் அந்த நாளில் பெரிய புரட்சிக்காரர். ஆங்கிலேய நீதிபதிகளின் முன் கைகட்டி நிற்பானேன், அந்நியர் முன் எமது குறைகளை எடுத்துரைப்பானேன், எல்லாமே எங்களுக்குள் நின்று போக வேண்டும் என்ற கொள்கை உடையவர். எனவே தனது சமூகத்திற்கு தானே தீர்ப்பு வழங்கத் துணிந்தார். அவர் சமூகம் அதற்கு ஆதரவு தந்தது. அவரது தீர்ப்பை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டது. எதிரிகளின் குற்றத்தைப் பொறுத்து பத்திரிகைகளின் நிறம் வேறுபடுமாம். பொய் சொன்ன குற்றமாக இருந்தால் பச்சை நிற சாயத்தால் எழுதப் பெற்ற "குற்றப்பத்திரிகை" எதிரியைச் சென்றடையுமாம். (பச்சைப் பொய் சொல்கிறான் என்ற வார்த்தையில் உள்ள பச்சைக்கும் பொய்க்கும் ஏதோ தொடர்பை எமது அன்றைய தமிழர்கள் கண்டிருக்கிறார்கள் போலும்)

தனது மைத்துனர் நீதிமன்றம் வைத்து இராஜதுரோகம் செய்கிறார் என்பதை எசமான விசுவாசம் மிக்க சபாபதிமுதலியார் கண்டு அதனை ஆங்கிலேயருக்கு எடுத்துரைக்க, மைத்துனர் சின்னத்தம்பி கைதாகி சிறைவாசத்தை அனுபவித்து அந்நியராம் ஆங்கிலேயர் சிறைக்குள்ளேயே மாண்டு போனார்.

அவரைக் காட்டிக் கொடுத்து ஆங்கிலேயர் தம் விசு வாசத்திற்கு பாத்திரமானவர் என் வழித் தொடர்பில் உறவினர் என்பதால் உள்ளம் வெந்தவன் நான். அதே வேளை அந்நியராம் ஆங்கிலேய நீதிபதியை ஏற்காத சின்னத்தம்பி முதலியாரின் சுதந்திரக் காற்றை உள்வாங்கிச் செம்மைப் பட்டிருக்கிறேன்.

இவை, பாட்டி சொன்ன பழங்கதையாக அல்ல. நான் அறிந்த வரை குற்றப்பத்திரிகையை இங்கே இவ்வாறுதான் இனம் காணுகிறேன். இந்தக் கதையை சிறு வயதில் கேட்டதும் "பத்திரம்" என்று சுட்டு விரல் காட்டும் சம்பவமும் என் நினைவுக்கு வருகிறது. பத்திரம், பத்திரம் பார்த்துக் கொள், பத்திரமாகப் பார்த்துக் கொள், இவை எல்லாமே கவனம், கவனமாக இருந்து கொள், கவனத்தில் வைத்திரு என்ற பொருளிலே பத்திரிகைக்கும் நிலைத்திருக்க வேண்டும்.

அந்த ஆங்கிலேயர் கால கட்டத்தில் வசன நடை கைவந்த வல்லாளர், பத்திராதிபர் என்ற நிலையில் தமிழ் பெரியார் "ஆறுமுகநாவலர்" அவர்களை நோக்குவோம். அவரது நாவன்மையும், எழுத்து வன்மையும் கண்டனத்திலும் சாதியத்திலும் ஆரியப் பிராமணியராம் திருவாவடுதுறை வழியில் நின்று சைவ சமய பத்திரிகைப் பணியாக ஈழத்தமிழரிடையே புகுந்து கொண்டது. இந்த ஆரிய ஆதீனம் எல்லாம் தமிழைத் துண்டாடும் கொள்கையை இந்தியா இலங்கை சுதந்திரம் அடையு முன்பே முடுக்கி விட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டி உள்ளது.

ஏனெனில் கிறிஸ்தவ வேதத்தை ஆங்கிலேயருக்கு தமிழ்ப் படுத்திக் கொடுத்த நாவலர், பின் தங்கிய மக்களை மதம் மாற வைத்து கிறீஸ்தவம் வளர ஊக்குவித்துக் கொண்டே சைவத்தையும் வளர்த்திருக்கிறார். நாவலரின் கண்டனப் பத்திரிகைகளின் ஆசார அனுட்டானங்களின் ஊடாக அன்றைய சாதியம் விரிசல் கணடுவிட்டதை தெளிந்திட முடிகிறது. முழுத் தமிழர்களின் அன்றைய விரிசல் போக்கினால் பின்னாளில் ஏற்படப் போகும்அபாயத்தை உணர்ந்தவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த "அருள்பிரகாச அடிகளார்" அவர்களே. ஆன்ம நேய ஒருமைப்பாட்டின் ஊடாக மதவழிபாட்டை நடத்தியவர் அந்த வள்ளலார் ஒருவரே. "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்று கலங்குகின்ற கருணை மகான் அவர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆரிய நாவலர் ஒப்பந்தம் அந்த ஞானியை தடுமாற வைத்துவிட்டது. இவை தமிழர் வரலாற்றின் சோகக் கதைகள், இந்தக் கதையை நீட்சிப்படுத்தாது ஆங்கிலோ – நாவலர் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வருவோம்.

கலைச் செல்வி, உதயதாரகை, உதயபானு, ஈழகேசரிகளை நோக்குவோம். ஆங்கிலேய அழுத்தங்களை உருவாக்குவோம். ஆசார அனுட்டானம் நிறைந்த சிவ சிந்தனைகளை நுகர்வோம். இதே வேளை பின் தங்கிய பிற்படுத்தப்பட்ட மக்கள் மதம்மாறி ஆங்கிலக் கல்வி பயின்று மேற்குலகினர் போல ஆங்கிலப் பத்திரிகை படிப்பதைக் காண்போம். மேட்டுக் குடியினரும் தாம் பின் தங்கிவிடப் போகிறோம் என்ற பயத்துடன் கிறீஸ்தவம் தழுவி அரை ஆங்கிலேயராகிய நிலையையும் தெளிவோம்.

இவற்றை எல்லாம் கோவைப் படுத்தினால் நாவலருடனும், ஆங்கிலேயருடனும் சடுகுடு விளையாடிய அன்றைய அப்பாவி தமிழரின் சமூக சித்தாந்தமே இன்று வரை தொடரும் ஈழத் தமிழரின் நிலைப்பாடு என்று தெளியலாம். இத்தகய பின்னணியில் இருந்து எழுந்து, பிரித்தானியர் சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்ற ஈழ உரிமைகளுக்காகப் போராடுகின்ற இன்றைய காலகட்டம் வரை கோவைப் படுத்தினால்....

வெள்ளையர் அடக்கு முறையினூடாகப் பிறந்து..... சிங்களவர் காலத்தில் தணிக்கைக்குப் போய்..... தமிழர் தம் உரிமைக்காக சுதந்திரத்துடன் எழுதவேண்டிய இன்றய காலகட்டத்தில்கூட எம்மிடையே உருவாகியுள்ள பிளவுகள், இடக்கு முடக்குகளால் தமிழ் பத்திரிகை உலகம் இன்னும் முழுமை பெறவில்லை என்றே கருத வேண்டி உள்ளது.

எழுத்தாளர்களின் சுற்றி வளைப்புகள், பிள்ளையார் சுழிகள் கூட ஏதோ ஏக்கங்களைத் தெரிவிப்பது போன்ற பிரமையே ஏற்படுகின்றது. ஆம் தமிழ் பத்திரிகை உலகம் இன்னும் சுதந்திரத்துடன் அடியெடுத்து வைக்கவில்லை.


எமது முழுத் தமிழரும் நேச மனப்பான்மையுடன் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுடன் ஒருவரை ஒருவர் தழுவும் போது எழப் போவதுதான் உண்மையான, உயிரோட்டமான பத்திரிகைச் சுதந்திரம். அதுவரை தணிக்கை நிரப்பும் பழைய சங்கதிதான்.

இனி ஈழவரைப் பாதிக்கும் தமிழ் நாட்டுப் பத்திரிகைத் துறை அவலத்திற்கு வருவோம். இந்தியாவில் முதன்முதலாக கீழைத்தேய மொழியாக முதல் தமிழே அச்சு வாகனம் ஏறி இருக்கின்றது. "தம்பிரான் வணக்கம்" என்ற பெயருடன் வணபிதா "கென்றிக்ஸ்" என்னும் பறங்கியரால் 1577ல் இந் நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழர் தம் தொன்மைச் சிறப்பிற்கு தலை வணங்கியவர்கள் ஐரோப்பியர்களே. அதே வேளை அன்னை தமிழை மறந்து அன்னிய மோகத்திற்கு தமிழர்கள் அடிமையாகி இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



"தம்பிரான் வணக்கம்" அச்சேறி 4 நூற்றாண்டுகளுக்குப் பின்னும் தமிழ்ப் பத்திரிகைகள் நல்ல தமிழை வளர்க்கவில்லை. 1942 களில் தமிழகத்துப் பத்திரிகைகளில் ஒன்று இப்படித்தான் தலைப்புச் செய்தியைப் போட்டிருக்கிறது. "ஸ்ரீ. கோ. குணா அடிசனல் மஜிஸ்திரெட் முன்னிலையில் ஆஜார் செய்யப்பட்டார். ஸ்ரீ ஹென்றி கார்டி ஜாமின் கூறி ஆஜாரானார். இது விசயம் பம்பாய் ஹைக்கோட்டிற்கு அப்பீல் பண்ணுவார் என எதர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை இந்தியாவில் படித்தவர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் மலையாளிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களது பத்திரிகை வளர்ச்சி அனைவரையும் படித்தவர்கள் ஆக்கிக் கொண்டு இருக்கிறது. அழகான இனிய சொற்பிரயோகங்கள் மேற்குலகின் அறிவியல் விஞ்ஞான சொற்களை உள்வாங்கும் போது ஏற்படுத்தும் மொழியாழுகை அந்த மலையாளத்தில். அங்கே எமது சங்க இலக்கியச் சொற்கள் அவர்களின் பேச்சுப் பதமாகப் பிரயோகிக்கப்படுதல் கண்டு புளகாங்கிதம் அடைகின்றோம்.

அதே வேளை தூய தமிழர்களாகிய நாங்கள் எங்கோ அந்தியத்திற்குள் புகுந்து விட்டோம் என்ற அவலம் ஏற்பட்டு தலை குனிந்து கொள்கின்றோம். இந்த மலையாளிகளுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

ஈழத்தில் பிறந்த நாவலரும், தாமோதரனும் தமிழ் வளர்க்க வேண்டிய நிலையில் அன்றைய தமிழ் நாடு இருந்திருக்கிறது. பாரதியார், பாரதிதாசன், திரு. வி. க., பேரறிஞர் அண்ணா முதலிய அறிஞர்களால் தமிழ் சீர்திருத்தமுற்றும் இருந்திருக்கிறது.

60களுக்கு முற்பட்ட தொடர்புச் சாதனமான சினிமாத்துறை கூட சிதையாத அழகு தமிழை தமிழ் கலாச்சாரமாக்கி திரையிட்டிருக்கிறது. இன்றைய கால கட்டத்தில் (வீடியோ பத்திரிகைகள் உட்பட) அறிவியல் சிந்தனையூட்ட வேண்டிய தமிழ் ஊடகங்கள் அனைத்துமே விளம்பர வியாபாரப் பண்டங்கள் ஆகிவிட்டன. திருட்டு, ஆபாசம், சாதிச் சண்டை இப்படியாக உருவாக்கப்பட்டு சோமாரி பேமானிகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்து எழுத்தாளர் "பசு ஜயா" எழுத்தாளர் மகாநாடு ஒன்றில் இப்படிக் கூறுகின்றார். "எழுதுகிற ஆவலோடு எழுதுவதற்கு இலக்கிய வளமோ, கருத்துக்களோ இல்லாமல் நோய்களை இனங்கண்டு அதில் தெளிவடைந்து அறிவு பூர்வமாக அராயப்பட்டு முடிவாகிவிட்ட விடயங்களை மீண்டும் ஆணிவேரில் இருந்து ஆராய முற்படுவதன் மூலம் மீண்டும் சமூகப் பிரச்சினைகளை பத்திரிகைகள் தூண்டுகின்றன." பசு ஜயாவின் இந்தக் கணக்கிலே மேற்குலகில் வெளியாகும் எமது ஒரு சில பத்திரிகைகளையும் போடத்தான் வேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# பலசரக்கு பலராமன்



பக்கத்துதோட்டக் காரன்ர காய் பிஞ்சுகளை வைச்சு வியாபாரம் பண்ணுறான் என்கிறதுக்காக அந்த தோட்டக்காரன் என்ரை பங்காளன் ஆகிவிடுவானா என்ன?

உங்கட சரக்கையும் கொள்வனவு செய்யலாம்

தரமானதாய் தாருங்கோ.

என்னட்ட வாற வாடிக்கைக் காரங்களை திருப்பி அனுப்பக் கூடாது திருப்தியாய் அனுப்ப வேணும் கண்டீங்களோ!

## கவிதைப் போட்டி

சிறந்த கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கவிதைப்போட்டி ஒன்றை அரும்பு நடாத்தவுள்ளது. தரமான மூன்று கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

இப் போட்டிக்கு அரும்பு சஞ்சிகையின் உறவினர்கள் கலந்து கொள்ள முடியாது.

கவிதைகள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

**12.12.1995**

படிப்பகம்

www.padippakam.com



1785, 1786, 1790 ம் ஆண்டில் பிறந்த கிறிம் சகோதரர்கள் ஜேர்மனில் வசித்து வந்தார்கள். மூத்த சகோதரர் யாக்கோப்புடன் இரண்டாவது சகோதரர் வில்கேம் சேர்ந்து பல்கலைக்கழகமொன்றில் மொழியாராய்ச்சி செய்து வந்தார். 1837ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் பங்குபற்றியதால் இருவரும் வேலையை இழந்தார்கள். மூன்றாவது சகோதரரோ ஓவியராக வேலைசெய்து வந்தார். பின்னர் இவர்கள் மூவரும் சேர்ந்து பல கதைகளை எழுதிவந்தார்கள். பிரேமன் நகரத்து இசைக்குழு கதையும் இவர்கள் எழுதியவற்றில் ஒன்றே.

# பிரேமன் நகரத்து இசைக்குழு

*தமிழில் எம்.சியா.*

சென்ற இதழ் தொடர்ச்சி

(தனது எசமானால் பிரயோசனம் இல்லை என்று விரட்டப்பட்ட கழுதை, அவ்விதமே புறக்கணிக்கப்பட்ட நாய், பூனை, சேவல் ஆகியவற்றைத் தோழர்களாகப் பெற்று பிரேமன் நகரத்துக்குப் போய் இசைபாடிப் பிழைக்கலாம் என்று சென்று கொண்டிருக்கையில் அன்றைய இரவைக் காட்டுப் பகுதியில் கழித்தன. உறங்குவதற்கு தெரிந்தெடுக்கப்பட்ட மர உச்சியில் உறங்க முயன்ற சேவலுக்கு சிறிய வெளிச்சம் ஒன்று கண்ணுக்குத் தெரிந்தது)

சேவல் தனது கண்ணுக்குத் தெரிந்த வெளிச்சம் பற்றி தனது தோழர்களுக்குத் தெரிவித்தது. கழுதை "அப்படியானால் அந்த வெளிச்சம் வரும் வீட்டை நோக்கிப் போவோமே" என்றது. நாயும் தனது நாக்கில் நீர் சொட்ட "அந்த வீட்டுக்குப் போனால் எலும்புத் துண்டுகள் கிடைக்கும்" என்று தனது ஆவலை வெளியிட்டது. அனைத்தும் அந்த வீட்டை நெருங்க வெளிச்சம் பெரிதாகத் தெரிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அவை அந்த வீட்டுக்குள் திருடர் நடமாட்டம் உண்டென உணர்ந்தன. கழுதை உயரமான படியால் வீட்டுக்குள் நடப்பதை ஜன்னல் வழியே பார்த்தது. சேவல் கழுதையிடம் வீட்டுக்குள் நடப்பது என்ன? என்று விசாரித்தது. "மேசை மீது நல்ல உணவுகள் வைத்து திருடர்கள் சாப்பிடுகிறார்கள் இந்த உணவுகள் எமக்குக் கிடைத்தால் எப்படி இருக்கும்?" என்று பெருமூச்சு விட்டது. உடனே நான்கு தோழர்களும் அந்த திருடர்களைத் துரத்தி அந்த உணவை தாங்கள் உண்ணத் திட்டம் தீட்டின.

கழுதை தனது முன்னங்கால் இரண்டையும் தூக்கி யன்னல் படியில் வைத்தது, நாய் கழுதையின் முதுகில் ஏறி நின்றுது. பூனை நாயின் முதுகில் ஏறி நின்றது, சேவல் பூனையின் முதுகில் நின்றது. இவை எந்த நோக்கத்திற்காக பிரேமன் நகரத்திற்குப் புறப்பட்டனவோ - : அந்த நோக்கத்தின் முதல் கட்டமாக அவற்றின் இசை இங்கே ஆரம்பமாகி விட்டது. கழுதை தன் குரலை எழுப்பியது, சேவல் கூவியது, பூனையும் நாயும் அவ்விதமே தங்கள் குரலையும் எழுப்பின. இவற்றின் ஒருமித்த இசை அந்த திருடர்களுக்குப் பயத்தை ஊட்டியது. திடீரென கழுதையும் தோழர்களும் யன்னல் கண்ணாடியை நொருக்கி வீட்டிற்குள் பிரவேசித்தன.

"இது பேயாகத்தான் இருக்க வேண்டும்" என்று பயந்து அந்த திருடர்கள் கதவைத்திறந்து ஓட்டம் எடுத்தனர். அது தான் சந்தர்ப்பம் என்று கழுதையும் அதன் தோழர்களும் உணவை நெருங்கின. உணவைக்கண்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டவைபோல் வயிறு புடைக்க உண்டன.

உணவுண்ட களையும் அதிக தூரம் நடந்து வந்த களையும் அவைக்கு உறக்கத்தை வர: வழைத்தது. விளக்கை அணைத்தன. கழுதை சமையலறைப்படியிலும், நாய் கதவின் பின் புறமும், பூனை அடுப்பங்கரையிலும், சேவல் கதவின் மேல் விளிம்பிலும் படுத்து உறக்கத்தில் ஆழ்ந்தன. வெளியே பயந்து ஓடிய திருடர்கள் தமது வீட்டை மீண்டும் நெருங்கினர். விளக்கு அணைந்து இருந்தது, எல்லாம் அமைதியாக இருப்பதாக உணர்ந்தனர்.

அப்போது திருடர் தலைவன் "நாங்கள் இப்படிப் பயந்து ஓடியிருக்கக் கூடாது என்று கூறி தங்களில் ஒருவனை வீட்டிற்குள் போய் பார்த்து வரும்படி ஏவினான். அந்தத் திருடனும் அடுக்களைப்பக்கமாக நுளைந்து விளக்கை ஏற்ற எண்ணியபோது, பூனையின் நெருப்புக் கோளம் போன்ற கண்களைக் கண்டான்.


படிப்பகம்

www.padippakam.com

ஒரு தீக்குச்சியைத் தட்டி விளக்கை ஏற்ற முயன்றான். திடீரென விளித்த பூனை பாய்ந்து திருடனை விராண்டியது. திருடன் பயந்து கதவைத் திறந்து கொண்டு ஓட முயற்சித்தான். கதவருகே படுத்திருந்த நாய் திருடன் காலைக்கவ்வியது. உடனே திருடன் சமையலறைப்பக்கம் ஓடினான். அங்கே கழுதை காலால் எட்டி உதைத்தது. அந்தச் சத்தம் சேவலின் காதில் பெரிதாக ஒலித்தது. சேவல் பெரிய சத்தமிட்டுக் கூவியது. திருடன் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடி வந்து தலைவனிடம் முறையிட்டான்.

"சமையல் அறைக்குள் இருந்து முகத்தை விறாண்டியும், கதவடியில் இருந்து காலைக் கடித்தும், சமையல் அறைப் பக்கம் தடியால் அடித்தும் முகட்டில் படுத்திருந்த தலைவன் போல ஒருவன் திருடனைப் பிடி என்று கத்துவது போலவும் இருந்தது." என்றான் திருடன். திருடர்கள் பயந்தனர். உடனே அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர். கழுதையும் அதன் தோழர்களும் பிற்காலம் முழுவதும் அந்த வீட்டிலேயே வாழ்ந்தன.

(முற்றும்)

### வாழ்க்கை

கடற்கரையில்
கிழிஞ்சல்.....
தனது
சோகக் கதையை
சொல்லி முடிக்க வில்லை.....
அதற்குள்ளே
அலைக்கரங்கள்
அதனை
அள்ளிச் செல்லும்
அவலம்

கவிஞர். ஜெயன்

### தேன் தமிழ்

ஆறு தன்வழியே ஓடுகிறது
கடலலைகளும் கடலைத்
தாண்டாமல் ஆடுகின்றது.
பறவைகளும் கூடத்
தங்கள் தங்கள்
கூடுகளுக்கே
செல்கின்றன.
ஆனால் மனிதன் மாத்திரம்
எல்லையை மறந்து



படிப்பகம்

www.padippakam.com

# கீரையும் சோறும்

எமது முன்னோர்கள் இயற்கையுடன் வாழ்ந்தனர். இயற்கை உணவுகளையே உண்டனர். அதனால் நோய் நொடிகள் இன்றி நீண்ட நாட்கள் சீவித்தனர். இன்றைய மனிதன் வாலிபம் அடையுமுன்பு தளர்ந்து போகிறான். அவனைப் புதுப் புது நோய்கள் பீடிக்கின்றன. அவனது தளர்வுக்கும் நோய்களுக்கும் அவன் தெரிவு செய்யும் ஆகாரங்களும் காரணமாக அமையலாம்.

இந்த மேற்குலகில் எமது உணவை குளிர்சாதனப் பெட்டியில் இருந்து பெற்றே தயார் செய்கின்றோம். அதே வேளை ஐரோப்பியரது முற்று முழுதான உணவுக் கொள்கையும் எமக்குக் கிடையாது. இரண்டும் கெட்டான் நிலையிலேயே எமது உணவு இங்கு தயாராகிறது. அதனால் புலம் பெயர்ந்த எமது மக்களில் பலர் விதம் விதமான நோய் களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

"ஊரில் இருந்த போது இப்படி இல்லை. இங்கே வந்த பின்பு தான் எல்லாம்" என்று ஒப்பாரி வைப்போரும் உண்டு. எமது உடல் ஆரோக்கியத்தை பச்சைப் பசேல் என்று காட்சி தரும் கீரை வகைகள் முடிவு செய்கின்றன. சில கீரை வகைகளோ எமது ஆரோக்கியத்தை குன்றவும் செய்து விடும்.

எமது தமிழ் மருத்துவம் பண்டைக்காலத்தில் இருந்தே இயற்கையில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு தாவரத்தின் குணவியல்புகளையும் அதனை உண்பதால் மனிதனுக்கு ஏற்படும் நன்மைகளையும் பாடி வைத்திருக்கிறது.

தற்போதய கோடைகாலத்தில் வீட்டுத் தோட்டம் செய்வோர் பயிர் பச்சைகளை உண்டு பண்ணி உடனுக்குடன் சமைத்து உண்ணலாமே!

முளைக் கீரை பற்றி எங்கள் பண்டைய அறிஞர்கள் இவ்வாறு பாடிவைத்துள்ளார்கள்

தளர்ந்தவர்க்கும் பாலர்க்கும் தக்கவயதோர்க்கும்
இளங்கீரை நாவுக்கிதமாக – கிளம்பு
சுரகாசம் போக்குத் தொடர்பசி உண்டாக்கும்
பிரகாசமாய் எடுத்துப் பேசு.

அதாவது வயது முதிர்ந்து நாடி நரம்பு தளர்ந்து போனவர்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள் அனைவருக்கும் இந்தக் கீரை நாவுக்குச் சுவைதரக் கூடியது. பசியைத்தூண்டக் கூடியது. கசத்தினால் காய்ச்சல் வந்தால் அந்தக் காய்ச்சலை நீக்கக் வல்லது. இதனை உயர்ந்த ரகமான கீரை என்று எல்லாருக்குமே சிபார்சு செய்யலாம்.

–சித்தர்



படிப்பகம்

www.padippakam.com

# எங்கே என் 'வெல்லி'




நட்சத்திரங்கள்.... தன்பாட்டில் வானில் திரிவன. ஊர்வலமாய்.... தோரணமாய் தெரிவன.

குழந்தைகளைப்போல் கொஞ்சிச் சிரிப்பன. எல்லாக் குழந்தைகளையும் போலவே நானும் நட்சத்திரத்தைப் பார்ப்பேன். பெரிய 'ரொக்கற்'றில் ஏறி ஒருநாள் அவற்றுக்குக் கிட்டப் போவேன். பயமாயிருந்தாலும் கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டு விரல் இடைவெளிகளுக்கூடாக மெதுவாகப் பார்ப்பேன். மேகம் தெளிவாயிருந்தால் அவற்றை எண்ணலாம். ஒருநாள் நான் எண்ணினேன். ஆனால் 127க்குமேல் எண்ணமுடியவில்லை. எண்ணியவற்றையே திரும்ப எண்ணுகிறேனோ எனச் சந்தேகம் வந்தது. அதோடு 500க்குமேல் எண்ணவும் எனக்குத் தெரியாது.

எங்கடை வீட்டுக்கு வந்த ஒரு மாமா தனக்கு நட்சத்திரங்களைத் தெரியும் என்றார். நானும் தெரியும் என்றேன். அவர்

**க. ஆதவன்**

அவற்றுடன் கதைத்தேன் என்றார். நானும் கதைத்தேன் என்றேன். என்னைப் பார்த்து அவர் சிரித்தார். நான் ஏதோ பொய் சொல்கிறேன் என நினைத்து.

முந்தி ஒருநாள் நாங்கள் இலங்கையிலை இருக்கேக்கை பிள்ளையார் கோயில் திருவிழாவுக்குப் போட்டு வரேக்கை நல்ல இரவு. நாங்கள் பனைமரங்களுக்கூடாக


படிப்பகம்

www.padippakam.com

நடந்து வந்தம். எனக்கு நல்ல நித்திரை வந்தது எண்டாலும் நட்சத்திரங்களைப் பாக்கிற ஆவலாலை நித்திரை கொள்ளேல்லை. என்ரை அப்பா என்னைத் தூக்கித் தன்ரை தோளிலை இருத்தினார். அப்ப நான் பாரமில்லை. இப்ப கொஞ்சம் கொழுத்திருக்கிறன் எண்டு அம்மா சொன்னவ. அப்பா கொஞ்சம் தொங்கித் தொங்கித்தான் நடப்பார். நான் தோளிலை இருந்தபடி அண்ணாந்து பார்த்தபடி நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டு வந்தன். அப்பான்ரை ஒவ்வொரு தொங்கலுக்கும் நட்சத்திரங்களும் கிட்ட வந்தும் தூரப்போயும் கொண்டிருந்தன. நட்சத்திரங்களை 'வெள்ளி' எண்டும் சொல்லலாமாம். எனக்கு வெள்ளி எண்ட பெயரிலை அவ்வளவு விருப்பம் இல்லை. அதுக்கொரு காரணமும் இருக்கு. நான் ஆகவும் சின்னனா இருக்கேக்கை வெள்ளி எண்டுறதை 'வெல்லி' எண்டுதான் சொல்லுவனாம். எவ்வளவுதரம் சொல்லிப் பார்த்தாலும் வெல்லி எண்டுதான் எனக்கு வந்தது. பிறகு 'நட்சத்திரம்' எண்ட பேரைக் கேள்விப்பட்ட உடனை அதைச் சொல்ல ஆரம்பிச்சிட்டன். அதுவும் சொல்லக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. 'நச்சசித்திரம்' எண்டுதான் வந்தது, பிறகு ஒருமாதிரிப் பழகிட்டன். இலங்கையிலை எங்கடை வீடு நல்ல பெரிய வீடு. பின்விறாந்தையிலை படிகள் செய்து ஏணிபோல ஒன்று இருக்கும். அதிலை ஏறிப் போனா ஒரு சின்ன மொட்டை மாடிமாதிரி இருக்கும். புழுக்கமான காலத்திலையும் திருவிழாக் காலத்திலையும் நாங்கள் அங்குதான் படுப்பம். திருவிழாக் காலத்திலை யாழ்ப்பாணத்துச் சின்னம்மா சித்தப்பா பிள்ளையள் வந்து எங்கடை வீட்டிலை நிப்பினம். அப்ப எல்லாருக்கும் இடம் காணாதுதானே!

எனக்கு மொட்டை மாடியிலை படுக்க நல்ல ஆசை. ஆனா அப்பா அல்லாட்டி அம்மா கட்டாயம் பக்கத்திலை வந்து படுக்க வேணும். எனக்குப் 'பே'யுக்குச் சரியான பயம். அது மேலாலை வந்து என்னைத் தூக்கிக் கொண்டுபோய் சுடலை மடத்திலை வழத்திக் கொஞ்சம் கொஞ்சமா இரத்தம் எல்லாத்தையுங் குடிச்சுப்போடும். அப்பா அல்லாட்டி அம்மா படுத்திருந்தா 'பே' வராது. அவையின்ரை உடம்பிலை என்ரை ஒரு காலைப் போட்டுக்கொண்டு நிமிர்ந்து படுத்துக் கொண்டு 'நட்சத்திரங்களை'ப் பார்ப்பேன். எங்கடை மொட்டைமாடிக்குப் பக்கத்திலை 2 தென்னை மரங்கள் நிக்குது. ஒண்டு கொஞ்சங் கட்டை மற்றது உயரம். கட்டையான மரத்தின்ரை கடைசி ஓலையின்ரை நுனியை என்னாலை தொட ஏலும். உயரமான மரத்திலை கனக்க இளநீர் இருக்கும். அப்பா ஒரு சின்னக் கொக்கத்தடியாலை பிடுங்கி வெட்டித் தருவார். தென்னோலையளுக்கூடாக நான் நட்சத்திரங்களைப் பார்ப்பேன். சில நட்சத்திரங்கள் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடும். காற்றில் ஓலை ஆடியவுடன் தலையை வெளியே நீட்டிக் 'கண்டேன்' என்று சொல்லும். பின்னர் தலையை உள்ளே இழுத்து ஒளிந்துகொள்ளும். அடுத்த காற்று வரும்வரை காத்திருக்கவேணும். காற்றும் வரும், ஆவலுடன் தேடிப் பார்த்தால் ஒரு பெரிய முகிலுக்குள் நட்சத்திரம் ஒளிந்துவிடும். அந்த முகில் விலக கனக்க நேரம் எடுக்கும். அதற்கிடையில் நான் நித்திரையாகிவிடுவேன்.

அன்றும் அப்படித்தான், நான் நன்றாகத் தூங்கிவிட்டேன். திடீரென ஒரு சிரிப்பொலி கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! தென்னோலைக்குப் பக்கத்தில் ஒரு நட்சத்திரம் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. தலை மட்டும் நட்சத்திரம் போல இருந்தது. நெஞ்சு,

படிப்பகம்

www.padippakam.com

வயிறு ஒன்றும் இல்லை. ஆனால் நீண்ட கால்களும் கைகளும் இருந்தன. கால்கள் கழுத்தில் இருந்து முளைத்திருந்தன. கைகள் தலையில் இருந்து முளைத்திருந்தன. பெரிய முழிக் கண்களால் சிமிட்டிக் கொண்டும், ஒரு கையால் தென்னோலையின் நுனியைப் பிடித்துக் கொண்டும் அழகாக ஒரு 'போஸ்' கொடுத்துக் கொண்டு நின்றிருந்தது.

"என்னையா தேடிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது. அட! அதற்குப் பேசக்கூட வருகிறதே.

"ஓம்" என்றேன் அமைதியாக.

"முகில் கூட்டம் இல்லாவிட்டால் நான் எப்போதும் உன் கண்ணுக்குத் தெரிவேன்" என்றது.

"என்னுடன் ஒளிச்சுப் பிடிச்சு விளையாட உனக்கு ஆசையா" என்று கேட்டேன்.

"ஓம்" என்று சொன்னது. ஆனால் வெட்கத்தால் அதன் முகம் சிவப்பாவதைக் காணக்கூடியதாக இருந்தது.

"நீ ஏன் தூரத்திலிருக்கிறாய்?"

"இல்லையே உனக்குப் பக்கத்தில்தானே நிற்கிறேன்"

"எங்கள் வீடும், எங்கள் தென்னை மரங்களும் உனக்குப் பிடித்திருக்கிறதா?" எனக் கேட்டேன்.

"ம்... அதனால்தானே ஒவ்வொரு நாளும் உன்னைப் பார்க்க வருகிறேன்" என்றது ஒருவித அசட்டையுடன்.

"ஒவ்கவாரு நாளும் என்னைப் பார்க்க வருவாயா?"

"வானம் தெளிவாக இருக்கவேண்டும். நீயும் மொட்டை மாடியில் படுத்திருக்க வேணும். தென்னை மரங்களும் என்னை வரவேற்க வேணும். வேறு யாரும் என்னைத் தொந்தரவு செய்யாதிருக்க வேணும். இவை யாவும் சரியென்றால் ஒவ்வொரு நாளும் நான் வருவேன்" என்றது.

எனகக்கு ஒரே குதூகலமாய் இருந்தது. எட்டி அதன் மூக்கில் கிள்ளவேண்டும் போல் இருந்தது.

உன்னை என்னால் தொடமுடியுமா?" என்று கேட்டேன். ஒன்றும் பேசாமல் முழிக்கண்களை மூடிக்கொண்டு மௌனமாக நின்றிருந்தது.

"உன்னை என்னால் தொடமுடியுமா?" சற்றுப் பெரிதாகக் கேட்டேன். நாணத்தால் அதன் முகம் நன்றாகச் சிவப்பதைக் காணக் கூடியதாயிருந்தது. என்னுடைய கையை நீட்டி எட்டி அதன் கன்னத்தை தடவுவதற்காகக் கையை நீட்டினேன். எனக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. தலை சுற்றுவதுபோல் பட்டது. உலகமே சுற்றுவதுபோல் பட்டது. நட்சத்திரத்தைக் காணவில்லை. ஆனால் பெரிய சிரிப்பொலி மட்டும் 'உன்னை ஏமாற்றிவிட்டேனே' என்று நகையாடியபடி காதுகளுக்குள் கேட்டுக் கொண்டிருந்தது. வானத்தைப் பார்த்தேன். எங்கும் கும்மிருட்டாய் இருந்தது. முகில் கூட்டங்கள் முற்றாகவே வானத்தை அடைத்துக் கொண்டிருந்தன.

00000

டெனிஷ் அன்ரி பாட்டுச் சொல்லித் தந்துகொண்டிருந்தா. எனக்கு பெரிசாகப் பாட வெக்கமாயிருந்தது. மற்ற டெனிஷ் பிள்ளையள் பாகுவதுபோலக் கத்திக் கொண்டிருந்தினம். என்ரை 'கின்டகாடின்' (Kindergarden) ஸ்கூல் 'ரவுணு'க்கை இருக்குது. எல்லாப் பிள்ளையளும் கையைக் கோத்துக் கொண்டு பாடிக்கொண்டு இருக்கும். 'கிறிஸ்டீனா' எண்ட டெனிஷ் பொம்பிளைப் பிள்ளை எப்பவும் என்ரை கையைப் பிடிச்சுக்கொண்டு பாட்டுப் பாடவரும். அதுக்கு வெக்கம் இல்லை. எனக்குச் சரியான வெக்கம். நான் ஒதுங்கி நிண்டாலும் அது என்ரை கையை இழுத்துக் கோத்துக் கொள்ளும். ஒவொரு நாளும் எங்கடை ஸ்கூல் முடியேக்கை நாங்கள் பாட்டுப் பாடுவம். பாடத்

www.padippakam.com

தொடங்கின உடனையே ஸ்கூல் முடியப் போகுது எண்டு தெரியும். வேலை முடிஞ்சு வாற வழியில என்னையுங் கூட்டிக் கொண்டுபோக அப்பா வாசலில நிப்பார் எண்ட ஞாபகமும் வரும். அப்ப என்னாலை பெரிசாப் பாட ஏலாதுதானே!

அண்டைக்கு அப்பா கொஞ்சம் களைச்சுப்போய் வந்திருக்கிறார் அபால தெரிஞ்சுது. வழக்கமா எனக்குச் 'சொக்கிலேட்' வாங்கிக் கொண்டு வாறவர். - அண்டைக்கு அதையும் மறந்திட்டு வந்திருக்கிறார். 'சைக்கிளிலை' போகேக்கையும் அப்பா ஒண்டுங் கதைக்கேல்லை. ஏனெண்டு தெரியேல்லை. நான் கேக்கவும் இல்லை. வீட்டைபோன உடனை T.Vலை 'கார்ட்டூன்' படம் போட்டுப் பாத்தன்.

இரவு ஏழு மணிபோல அம்மா வந்தா. அம்மா வந்தவுடனை அப்பா எழும்பிப் போய் மேசையிலை இருந்த கடிதத்தை எடுத்து அம்மாட்டைக் குடுத்தார். அம்மா வாசிச்சா. வாசிச்சவுடனை அம்மாவும் ஒரு மாதிரியா மாறிப் போனா. அம்மா சோபான்ரை மூலையிலை தொப்பெனக் குந்தி இருந்தா. நான் மெதுவா அம்மாட்டைப் போனன். அம்மான்ரை மடியிலை ஏறினன். அம்மான்ரை கன்னத்திலை ஒரு 'உம்ம்ம்மா'க் குடுத்தன்.பிறகு கேட்டன்.

"என்னம்மா நடந்தது?" என்று.

"அங்கை இலங்கையிலை எங்கடை வீட்டுக்கு 'பொம்' போட்டு வீடு, தென்னை மரங்கள் எவ்வாமே அழிஞ்சு போயிட்டுதாம்" என்று சொன்னா.

எனக்கு ஒரு மாதிரியாய் இருந்தது. நெஞ்சுக்குள்ளை என்னமோ செய்யுறது மாதிரிக் கிடந்தது, கதவைத் திறந்துகொண்டு வெளியிலை ஓடினன். அம்மா அப்பாவும் பின்னாலை ஓடிவந்தினம். நான் ஓடிப்போய் வானத்தை அண்ணாந்து பாத்தன். ஒரே கும்மிருட்டா இருந்துது. ஒரே குளிராகவும் இருந்துது. எனக்குத் தலை சுத்திறது மாதிரியுங் கிடந்துது. திரும்பி வீட்டுக்குள்ளை ஓடிவந்தன். என்ரை கட்டிலிலை போய்ப் படுத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தன். கண்களை இறுக்க மூடிக் கொண்டன்.

"வானம் தெளிவாக இருக்கவேணும். நீயும் மொட்டை மாடியிலை படுத்திருக்க வேணும்.

தென்னை மரங்களும் என்னை வரவேற்கவேணும்.

யாரும் தொந்தரவு செய்யாதிருக்க வேணும். இவையெல்லாம் சரியெண்டா ஒவ்வொரு நாளும் நான் வருவேன்"

கண்களைத் திறந்து பார்த்தன். அந்த நட்சத்திரத்தின்ரை சிரிப்பொலி மட்டும்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

எனக்குத் தெரியாம என்ரை கண்ணிலை இருந்து கண்ணீர் வந்தது. அம்மா வந்து என்னைத் தூக்கினா. அவான்ரை கண்களும் சாடையா நனைஞ்சிருக்கிறது மாதிரிக் கிடந்துது. அப்பா சிகரெட் குடித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தார்.

நன்றி சுவடுகள்
நோர்வே

## உப்பு

உப்பு என்பதற்கு இலத்தீன் மொழியில் "Sal" என்றே கருத்து. பழய நாட்களில் உரோமா புரியின் படை வீரர்களுக்கு சம்பவப் பணத்திற்குப் பதில் உப்பே வழங்கப்பட்டது. இச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே ஆங்கிலமும் சம்பவப்பணம் என்ற பொருவில் சலறி (Salary) என்று பயன்படுத்தி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த்தாய்ப்பற்று

கண்கள் இருநூற்று
நாற்பத்தேழுடையாள்
காவியம் புனைபல
செழிப்புடையாள்
சோலைக்கிளியின்
மொழியுடையாள்
குறிஞ்சி நாயகன்
நாட்டிய வனப்புடையாள்

உயிரானாள்! மெய்யானாள்
ஆக்கத்தின் கருவானாள்
தன்னுடைய தோழியர்
எத்தனைபேர் இருந்தும்
சங்கம் காத்த பாண்டியருக்குத்
தலையானாள்.

மணக்கும் மல்லிகையே
மாணிக்க மகுடபதி
வைகறை ஞாயிறே
மொட்டவிழ் தாமரையே
காலம் இது தான்டா
கண்ணுறங்கு! கண்ணுறங்கு!
நாளை புலர்கையிலே
கடமை உனக்கிருக்கு
தென்னை மரம்போல் நீ
குடைபிடிக்க வேணுமடா!
சேனைத் தலைவனுமாய்
நீ மிளிர வேணுமடா! என்று
அம்மாச்சி ஆராரோ
பாடிய பாட்டின்– தமிழ்த்
தென்றலில் தான் சிலிர்த்தேன்
அம்மா! என்னம்மா!

முத்தென்றாள் சார்பென்றாள்
அகமென்றாள்
புறமென்றாள்
சுட்டென்றாள்
அண்மை, சேய்மை என்றாள்
இன்னும் எத்தனையோ
கந்த மலர்ப்புதரானாள்
புதருள், தான் சென்றதில்லை
புறமிருந்து ரசித்ததுதான்.

அர்ச்சனைக் குதவாத
தாழை மலரென்று
செழிப்புற சிறப்புக்குள்
எத்தனையோ உனக்கிருந்தும்
தள்ளி வைத்தார் மூடர்கள்
தெய்வத்துக் கொவ்வாத தேவடியாள்
நீயென்று புறமிருந்து விட்டனரே
பொறுக்குமோ! இச்செயலும்

தாயென்பார்! சேயன்பார்!
தெவிட்டாத அமிழ்தென்பர்
முருகன் முன் வாழ்த்துரைத்த
முத்த தமிழென் என்பர்– ஆனாலும்
முருகனை அர்ச்சிக்க
உதவாத நஞ்சு நீயென்பர்

ஆரணம் ஓதுதற்கு
ஆகாய் நீ போடி
ஆரமுதே நீ வாடி– என்று
இன்புறுவர் நின்சுவையால்
இளைப்பும் ஆறிடுவர்
கோபுரத்தில் உன்னை வையார்
குறை மதியுடையார்.

மூத்த அறிஞர்களாய
முன்னிற்கும் நாயகர்கள்
ஈதுரை மாட்டாரோ
நின்தாகம் நீக்காரோ
என்னை ஈன்ற கோமதியே
நின் சேவை நான்புரிய
திருவருளும் சேர்த்திருக்கு
எனதுயிரே! நீவாழ்க!

கவிஞர் த. சண்முகதாஸ்–––





படிப்பகம்

www.padippakam.com




# முயற்சி

சிறகுகளை
உதிர்த்த
பறவையாய்
கரங்களை
உதிர்த்த
முடவன்....
பசுமை
உதிர்த்து
பட்டுப் போன
மொட்டை
மரப் பொந்தில்
ஒரு பசுங்கிளி....
சூரியச் சூட்டினால்
சுண்டும்
குளத்திற்குள்
நீர் வற்றி
மண்ணோடு
மண்ணாகப்
போகிறோம்
என்ற நினைவில்லாமல்
சுற்றித் திரியும்
மீன் குஞ்சுகள்....
பாம்புப் புற்றுக்குள்
இளைப்பாறும்
தவளைகள்....
பல்லியின்
பசைதடவிய
நாக்கை
தேன் என
சுவைக்க வரும்
போதைப் பூச்சிகள்....
மண்ணின்
தேமலாய்
இருக்கும்
பாலைவன
வாழ்க்கைப்
போர்க்களத்தில்
நிராயுதபாணியாய்
நிற்பவர்க்கு
உதவும்
ஒரே ஆயுதம்
முயற்சி.

கவிஞர் வா. மு. சே ஆண்டவர்
தமிழ்நாடு


படிப்பகம்

www.padippakam.com



# மனித வாழ்வும் சோதிடமும்

இக்கட்டுரை மூலம் முகூர்த்தம் அல்லது சுபவேளையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்த முனைகின்றேன். இதை தமிழ் மக்கள் படித்து, உணர்ந்து, செயற்பட்டு பயனடைவார்கள் என்ற நம்பிக்கையுடன் எழுதுகின்றேன்.

இந்த வீட்டுக்கு வந்த பிறகு எனக்கு ஒரே பிரச்சனை, இந்தக் காரை மாற்றிய பிறகு எனக்கு ஒரே அலைச்சல், என்று எம்மில் சிலர் கூறுவதை அடிக்கடி நீங்களும் கேட்டிருப்பீர்கள். இந்தக் கூற்றின்படி அந்த நபருக்கு அந்த வீடு பொருந்தவில்லை அல்லது அந்த வீட்டிற்கு அவர் குடிபுகுந்த நாள் சரியில்லை என்பதே அர்த்தமாகும். பணம் மட்டும் அமைதியான வாழ்வை அளித்திடும் என்று கூறுவதற்கில்லை. நேரங்கள் எமது வாழ்வில் எம்மை அறியாமலே பெரிய திருவிளையாடல்களை செய்கின்றன. நேரங்கள் என்று சொல்லும்போது அந்தந்த நேரங்களில் ஏற்படும் கிரக மாற்றங்களும், கிரகங்களின் அசைவுகளும் கிரகங்களின் பார்வைகளும் இப் புவியின்மீது நல்லதோ கெட்டதோ ஏதோ ஒருவகை தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன. இதை அவதானித்த சோதிட மகான்கள் எங்கள் நன்மைக்காக எந்தக் கருமத்தை எந்த நேரத்தில் ஆற்றினால் வெற்றி கிட்டும் என அறியத் தந்துள்ளனர். அந்த நேரங்களையே சுபமுகூர்த்தம் என்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

கல்யாணத்திற்கும் வீடுகட்டுவதற்கும் மாத்திரம்தான் சுபமுகூர்த்தம் பார்க்கவேண்டும் என்றில்லை. எமது அன்றாட வாழ்க்கையில் உள்ள ஏனைய கருமங்களுக்கும் அதைப் பயன்படுத்தி மகிழ்வான வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். அதாவது எமது வீட்டிற்கு ஒரு பொருளை வாங்கும்போதும், எமக்கு ஆபரணங்களை வாங்கும் போதும், புதியவீட்டிற்கு மாறிப் போகும்போதும், வாகனம் அல்லது வீட்டை வாங்கும்போதும், குழந்தைகளுக்கு அன்னப்பிராசனம், காதுகுத்தல், ஏடுதொடக்கல் போன்ற எல்லாக் கருமங்களுக்குமே சுபமுகூர்த்தங்கள் பார்த்துச் செய்தால் வெற்றியும் மகிழ்ச்சியும் ஏற்படுவது நிச்சயம். இவற்றை எமது முன்னோர் மதித்து கடைப்பிடித்து நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் நாம் மயக்குண்டு எமது ஆசாரங்களையும், இயற்கை வைத்தியத்தையும், சோதிடக் கலையையும் சரிவர அறிந்து ஆராயாமல் கைவிட்டதனால் அவற்றின் பயன்களை நாம் பூரணமாக பெறாது ஏதோ அரைகுறையாக செயற்பட்டு வருகின்றோம். முழுமையான வெற்றி அடைய வேண்டுமாயின் அந்தந்த கருமங்களை அதற்குரிய சுபமுகூர்த்தம் அமையும் நேரங்களில் செய்தல் வேண்டும்.

முகூர்த்தம் என்றால் எமது வாழ்வில் முக்கியமான காரியங்களை செய்வதற்காக சோதிடமென்னும் அற்புதக் கலையின் உதவியோடு கணிக்கப்படும் சுபவேளையாகும். பிரதானமாக திருமணத்திற்கும், திருமண எழுத்திற்கும், வீடுகட்டுவதற்கு அத்திவாரம் போடுவதற்கும், வீட்டிற்கு நிலை வைப்பதற்கும், வீடு குடிபுகுதலுக்கும் சுபமுகூர்த்தம் பார்ப்பது வழக்கம். மேற்கூறிய சுபமுகூர்த்தங்கள் பஞ்சாங்கங்களில் குறிக்கப்பட்டிருக்கும். பஞ்சாங்கங்களில் உள்ள சுபமுகூர்த்தங்கள் பொதுவானவை. திருமணம் அல்லது வேறு ஒரு முக்கியமான காரியத்தை செய்யப்போகும், அந்த நபரின் சந்திர இராசி, நட்சத்திரம் இவற்றை அனுசரித்து பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சுப நாட்களில் எவை அந்நபருக்கு பொருத்தமாக உள்ளதோ அந்த நாட்களையே தேந்தெடுத்தல் வேண்டும். அப்போதுதான் அது பூரண பலனை அளிக்கும். ஒரு நபருக்கு திருமணம் சம்பந்தமாகவோ அல்லது மனை, வாகனம் சம்பந்தமாகவோ அவரது சாதகப்படி குற்றம் குறை இருப்பினும் அந்த நபரின் இராசிக்குப் பொருத்தமான நந்நாளில் நிறைவான சுபமுகூர்த்தத்தில் அவர் அந்த காரியத்தை செய்வாரானால் சொல்லப்பட்ட குற்றம் குறைகள் பன்மடங்கு குறையும் என சோதிடம் கூறுகின்றது.


படிப்பகம்

www.padippakam.com


எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொருத்தரும் பஞ்சாங்கம் படித்து அதிலுள்ள முக்கியமான விடயங்களை அறியத் தெரிதல் அவசியமாகும். அது மிகப் பயனுள்ள விடயமாகும்.

சுபமுகூர்த்தம் சம்பந்தமான சில பொதுவான, இலகுவானற்றை கீழே தந்துள்ளேன் படித்து பயனடையுங்கள் :

1. செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும், தனது பிறந்த நட்சத்திர நாளிலும் கடன் கொடுப்பதோ அல்லது கடன் வாங்குவதோ ஆகாது.
2. செவ்வாய்க் கிழமை பொதுவாக எந்தவொரு நற்கருமத்திற்கும் விலக்கப்படல் வேண்டும்.
3. வீடு மாறுவதற்கு பிறந்த நட்சத்திரம் மிகவும் பொருத்தமானது.
4. அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, ஆகிய நாட்கள் சுபகருமங்களுக்கு விலக்கப்படல் வேண்டும்.
5. திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகியன சுபகருமங்களுக்கு ஏற்ற நாட்களாகும். ஆனால் அன்று மேற்கூறப்பட்ட அட்டமி, அமாவாசை போன்றவை அமையக் கூடாது.

தொடரும்......

கட்டுரை ஆசிரியர் : சோதிடர் சி . பாலசுப்பிரமணியம்.





படிப்பகம்

www.padippakam.com

# நம்பிக்கை

யுத்தங்கள் ஒரு நாள் முடிவுக்கு
வரும் எனவும்;
பட்டையங்கள் மண் வெட்டிகளாகவும்
ஈட்டிகள் அரிவாள்களாகவும்
மாறுமெனவும்;
நாட்டுக்கு நாடு எதிராய் எழும்பாமலும்
யுத்தத்தை இனிமேல் எவரும் கற்காத
நாட்கள் மலரும் என்ற கனவு
நனவாகும்
என்ற நம்பிக்கை எனக்கு
இன்னமும் உண்டு.

மாட்டின் லூதர்

## தேன்துளி

ஒய்வற்ற உழைப்பிலும், ஒழுக்க நெறியிலும் வாழ்வை நடத்துபவன் உன்னத நிலையை அடைகின்றான். அவன் வாழ்க்கை இமயம்போல் உயர்கின்றது. தன்னிலை கெட்டுத் திரிபவனின் வாழ்க்கையோ பள்ளம்போல் தாழ்கின்றது.

## கட்டுங்கள் திறக்கப்படும்

தாழ்பாழ்
போடாத
தமிழன்
கதவில்
நுழைய
சிங்களவனுக்கு
உரிமையில்லை
சத்தியாக்கிரகம்....
மேலைக்காற்று
சாளரக் கதவுகள்
சடசடக்க
வீசுகையில்
ஏபிசி
தாலாட்டில்
மட்டுமா
செந்தமிழ்
செல்வர்கள்
உடம்பு புரட்டிகினம்
கிருஸ்ணாவையும்
கிறிஸ்துவாக்கும்
பெரிய ஒப்பந்தங்களில்
அல்லவா கைச்சாத்திடுகினம்

கவிஞர் வென்றிச்சேயோன்

## தேன்துளி

சிலர் காரணமின்றிச் சிரிப்பார்கள், அது கோமாளிச் சிரிப்பு. சிலர் காரியமாகச் சிரிப்பார்கள், அது சந்தர்ப்பச் சிரிப்பு. சிலர் பின்னிருந்து சிரிப்பார்கள், அது ஏளனச்சிரிப்பு. சிலர் அன்போடு சிரிப்பார்கள், அதுதான் அழகான சிரிப்பு.


படிப்பகம்

www.padippakam.com

# மகளிர் அரங்கு



## தக்காளிப் பச்சடி

| | |
|---|---|
| தக்காளிப்பழம் | 2 |
| கடுகு | 1/4 கரண்டி |
| உழுத்தம் பருப்பு | 1/4 கரண்டி |
| தயிர் | 2 கரண்டி |
| வற்றல் மிளகாய் | 3 |
| உப்பு | 1/4 கரண்டி |

ஒரு சட்டியில் சிறிது எண்ணெய் ஊற்றி காயவைத்து, கடுகு, உழுத்தம் பருப்பு, பெருங்காயம், வற்றல் மிளகாய் இவற்றை வறுத்துக் கொண்டு துண்டாகிய நறுக்கிய தக்காளிப் பழத்தைப் போட்டு 5 நிமிடங்கள் வதக்கி ஒரு கிண்ணத்தில் கொட்டி ஆற வைக்கவேண்டும். ஆறிய பின் தயிர் உப்பு இவற்றைச் சேர்த்து நன்கு கரைத்து வைத்துப் பரிமாறவும்.

*வீட்டுக் குறிப்புகள்:–*

உங்கள் சமையலை யாராவது குறை சொன்னால் அதற்காக அவரை கோபித்துக் கொள்ளாதீர்கள். என்ன குறை என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அதைத் தவிர்க்க முயலுங்கள்.

பிறர் வீட்டில் இருந்து அவர்கள் பாத்திரத்தில் ஏதாவது கொடுத்து அனுப்பினால் திருப்பிக் கொடுக்கும் போது பாத்திரத்தை வெறும் பாத்திரமாகக் கொடுக்காமல் முடிந்தால் ஏதாவது உணவுப் பொருள்களை சிறிதளவாது வைத்துக் கொடுங்கள். இல்லையேல் நன்றி கூறிக் கொடுங்கள்.

நன்றி: வேதவல்லி "லிப்கோ"



படிப்பகம்

www.padippakam.com

*அழகுக் குறிப்புகள் சில:*

மிகவும் உயரமான பெண்கள் உயரமான கொண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. சிறிது குள்ளமாக உள்ள பெண்கள் கொண்டையைச் சிறிது கூர்மையாகவும், உயரமாகவும் போடுவது நல்லது. வட்ட முகமானவர்களுக்கும் உயரமான கொண்டை அழகூட்டும்.

மிகவும் கவர்ச்சியான புடவையை அணியும் போது மிகவும் படாடோபமான நகைககள் அணிவதைத் தவிர்ப்பது நலம். சாதாரணமாக ஒற்றை நகைகள் போதுமானது. அதே போல் பளபளப்பான நகைகள் அணியும் போது புடவை எளிமையானதாக இருக்க வேண்டும்.

பருமனாக உள்ள பெண்கள் பெரிய டிசைன் உள்ள உடைகளையோ அல்லது பெரிய பாடர்கள் உள்ள புடவைகளையோ தவிர்ப்பது நலம். உயரமான மெல்லிய பெண்கள் நீளக் கோடிட்ட உடைகள், சிறிய பூக்கள், மெல்லிய கரை போட்ட உடைகளைத் தவிர்ப்பது நலம்.

நன்றி: வேதவல்லி " அழகுக் குறிப்புகள்"

உதவி ( உமா)

மங்கையர்களே! இது உங்கள் பகுதி. உங்களுக்குத் தெரிந்த சமையற் குறிப்புகளையும், அழகுக் குறிப்புகளையும், இந்தப் பகுதியில் எழுதுங்கள். உங்கள் கருத்துக்களையும், உங்கள் ஆக்கங்களையும் நாம் ஆவலோடு எதிர் பார்க்கின்றோம்.



படிப்பகம்


www.padippakam.com

# பாலர் உலகம்

பிள்ளைகளே! இலங்கை எங்கள் நாடு!

உங்கள் அப்பா அம்மா பாட்டி ஆகியோர் டென்மார்க்கில் பிறக்கவில்லை. இதனை நீங்கள் அறிவீர்கள், நாங்கள் எங்கள் தாய் நாட்டில் நடைபெறும்- போர்க்காலச் சூழ்நிலையால் தான் இந்த ஐரோப்பிய நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த ஐரோப்பிய நாடு எமக்கு நிரந்தரமான நாடு அல்ல. இந்த நாட்டின் பண்பாடுகள் நமது நாட்டின் பண்பாட்டில் இருந்து வேறுபட்டவை. எதிர்காலத்தில் எமது நாட்டின் தலைவர்களாக வரவேண்டிய நீங்கள் எமது கலாச்சாரத்தை அறிவது அவசியம். ஊரில் உங்கள் அப்பா, அம்மா முன்பு கண்ட இப் பாலர் உலகத்தைக் காண உங்களையும் அன்போடு அழைத்துச் செல்கிறோம்.







படிப்பகம்

www.padippakam.com





# செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடெனும் பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே – செந்தமிழ்





2. வேதம் நிறைந்த தமிழ் நாடு – உயர்
வீரம் செறிந்ததமிழ் நாடு – நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல் – இளம்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு – செந்தமிழ்

3. காவிரி தென்பண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வைகைப் பொருணைநதி – என
மேவியாறு பலவோடத் – திரு
மேனி சிலிர்க்கும் தமிழ் நாடு



4. முத்தமிழ் மாமுனி நீள் வரையே – நின்று
மொய் புறக் காக்கும் தமிழ் நாடு – செல்வம்
எத்தனை உண்டு புவி மீதே – அவை
யாவும் படைத்த தமிழ் நாடு – செந்தமிழ்

5. நீலத்திரை கடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவம் செய் குமரி எல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு

செந்தமிழ் நாடு என்னும் இந்த இனிக்கும் பாடலைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார். இவர் குழந்தைகளுக்காகவும், பெரியவர்களுக்காகவும் நல்ல பல பாடல்களைப் பாடியிருக்கிறார். பிள்ளைகளே இப் பாடலை உங்கள் பெற்றோர்களின் உதவியுடன் பாடிப் பாருங்கள்.


படிப்பகம்

www.padippakam.com



## பெரிய புராணக் கதைகள்



# குங்கிலியக் கலயனார்

*தூபம் இடுதல்*

சோழ நாட்டிலே திருக்கடவூர் என்னும் ஒரு ஊர் உள்ளது. அங்கே வயல்களும், சோலைகளும், வேள்விச்சாலைகளும் மலிந்து விளங்குவன. பெண்களின் இன்னிசைக்கீதமும் வேத முழக்கமும் இடையறா தொலிக்கும்.
சிறப்பு மிக்க இவ் ஊரில் கலயனார் என்னும் சிவனடியார் வாழ்ந்தார். திரு வீராட்டனம் என்னும் கோயிலில் தினமும் குங்கிலியத் தூபம் இடுவதே அவருடைய திருத்தொண்டாகும். இவ்வாறு தொண்டாற்றும் நாட்களில் இறைவன் சோதனையால் கலயனார் மிகவும் வறியவரானார். அவரும் மனைவி மக்களும் பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள். அப்போதும் நாயனார் சிறப்பாக குங்கிலியத் தூபம் இட்டு மகிழ்ந்தார்.

*நெல் வாங்கச் செல்லுதல்*

ஒரு நாள் கலயனாரின் மனைவி தனது திரு மாங்கல்யத்தை அவிழ்த்து அவரிடம் கொடுத்தார். அதனை விற்று நெல் வாங்கி வரும்படி கூறினார். கலயனார் தாலியையும் கொண்டு வீதியில் போகும் போது ஒருவன் குலியப் பொதி கொண்டு சென்றான். நாயனார் குலியப் பொதியைக் கண்டதும் அளவில்லாத மகிழ்ச்சியுடன் தாலியைக் கொடுத்து அதனை வாங்கினார். நெல் வாங்க வேண்டியதை மறந்து விட்டார். கோயிலுக்குச் சென்று தூபமிட்டு அங்கே ஆனந்தமாகத் தங்கி விட்டார்.

*செல்வம் நிறைதல்*

அன்றிரவு கலயனார் வீட்டில் இறைவன் திருவருளால் அளவற்ற செல்வங்கள் குவிந்தன. நாயனாரும் மனைவியும் கடவுளைப் போற்றி வாழ்ந்தார்கள். அச் செல்வத்தை சிவத் தொண்டு புரிவதில் செலவிட்டார்கள்.


படிப்பகம்


www.padippakam.com

*சிவலிங்கத்தை நிமிர்த்தல்*

இவர்கள் மகிழ்ச்சியாக வாழும் நாட்களில் திருப்பனந்தாளில் சிவலிங்கம் சாய்ந்திருப்பதாகவும் அரசன் அதனை நேர்ப்படுத்த முடியாமல் வருந்துவதாகவும் கலயனார் கேள்விப்பட்டார். உடனே அங்கே சென்றார் சிவலிங்கத்தைக் கட்டிய கயிற்றை தன் கழுத்திலே கட்டி இழுத்தார். அப்போது சிவலிங்கம் நிமிர்ந்தது. நாயனார் மகிழ்ச்சியுடன் கடவூருக்கு மீண்டார்.

*விருந்தளித்தல்*

அப்பர் பெருமானும் சம்பந்தப் பெருமானும் கடவூருக்கு எழுந்தருளியபோது அவர்களை வரவேற்று உபசரித்தார். பின்னும் சில காலம் வாழ்ந்து நாயனார் இறைவடி சேர்ந்தார்.



## ஆடிப்பிறப்பு

ஆடி மாதம் வந்து விட்டது ஆடி மாதம் வந்தால் தமிழர்களுக்கு ஆடிப் பிறப்பு வருகிறது அல்லவா. ஆடி மாதப் பிறப்பு தமிழர்களாற் கொண்டாடும் ஒரு நாள் பனங்கட்டிக் கூழ் குடிக்கும் பெருநாள், கொழுக்கட்டை தின்னும் திரு நாள்.


இந்த நாளிலே பிள்ளைகள் கூழை சுடச் சுட ஊதி ஊதிக் குடிப்பர். கொழுக் கட்டையைக் கடித்துக் கடித்து உண்பர். வாழைப்பழங்களை உரித்து உரித்து தின்பர்.

அன்று ஆடிப்பிறப்புக்கு முதல் நாள் பாடசாலை முடியப் போகிறது நாளைக்கு ஆடிப்பிறப்பு ஆனபடியால் நாளை விடுமுறை என்று தலைமை ஆசிரியர் சொல்கிறார். மாணவர்கள் வெளியே வருகிறார்கள் அப்போது ஒரு பையன் தனது நண்பர்களைப் பார்த்து....



படிப்பகம்

www.padippakam.com





1

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக் கட்டை தின்னலாம் தோழர்களே!

என்று பாடுகிறான். உடனே வேறு ஒருவன்...



2

பாசிப் பயறு வறுத்துக் குற்றிச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி"
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு –நல்ல
மாவைப் பதமாய் வறுத் தெடுத்து

3

வேண்டிய தேங்காயை உடைத்துத் துருவியே
வேலூரிற் சக்கரையையுங் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை அதில் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

4

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக் கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்க பசி தீர்ந்திடுமே!



என்று பாடுகிறான். அவனைத் தொடர்ந்து சிறுமி ஒருத்தி பாடுகிறாள்.



படிப்பகம்

www.padippakam.com





5

பூவைத் துருவிப் பிளிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள
மணக்க மணக்க வாயுறுடுமே

6

குங்குமப் பொட்டிடுட்டு பூமாலை சூடியே
குத்து விளக்கைக் கொழுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்புப் படைப்போமே.



7

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப்புதுக் கூழ் குடிப்போமே

இவ்வாறு அவன் பாடி முடித்ததும் வேறு ஒரு பையன் பாடுகிறான்.

8

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக் குடித்துக்
கொழுக் கட்டை தன்னைக் கடிப்போமே.

இவ்வாறு அவர்கள் பாடி மகிழ்ச்சியோடு வீட்டுக்குப் போகிறார்கள்.

இந்த இனிய பாடலைப் பாடியவர் சோமசுந்தரப் புலவர் அவர்கள். அவர் யாழ்ப்பாணத்திலே நவாலி என்னும் ஊரில் வசித்தவர்.

படிப்பகம்

www.padippakam.com

# வேடம் வெளித்தது

ஒரு நாள் ஓநாய் ஒன்று ஆட்டுத் தோல் ஒன்றைக் கண்டு எடுத்தது. அதைத் தன்மீது போர்த்திக் கொண்டு ஆட்டு மந்தைப் பக்கம் போனது. ஆடுகளுடன் சேர்ந்து கொண்டது, அதை யாரும் சந்தேகிக்கவில்லை.

வாய்ப்பு வரும் போது தனியாய் தன்னுடன் இருந்த ஆட்டைக் கொன்று தின்று வந்தது. ஒரு நாள் மந்தை மேய்ப்பவனிடம் ஓநாய் கையும் மெய்யுமாகப் பிடிபட்டது.
அவன் ஓநாயைப் பிடித்து கழுத்தில் கயிற்றை மாட்டி மரத்தில் தூக்கிவிட்டான். அந்த வழியால் ஆடு மேய்ப்பவர்கள் சிலர் வந்தனர். அவர்கள் இந்த மாதிரி ஆட்டை தூக்கிப் போட்டிருக்கிறாயே என்று அதிசயமாக் கேட்டனர். அந்த மேய்ப்பவன் தனது கையிலிருந்த நீண்ட தடியால் ஓநாயின் ஆட்டுத் தோலை நீக்கினான். அவர்களும் உண்மையை உணர்ந்தனர். வேடம் போட்டு மக்களை ஏமாற்ற நினைப்பவன் ஒரு நாள் அகப்பட்டே தீருவான்.

பால் கெட்டுப்போகாமல் இருக்க
அதை என்ன செய்ய வேண்டும்?
–பாலைப் பசு விடமே விட்டு
விட வேண்டும்.

மழை ஏன் மேலே இருந்து
பொழிகிறது?
–அதற்கு கீழே இருந்து மேலே
போக வழி தெரியாது.
–நல்ல நண்பன்

என்னுடைய தாத்தாவின் அப்பா
வைத்தான் குதிரைக்குப் பிடிக்கும்
இது எதனால்?
–அவர் கொள்ளுத்தாத்தாவாக
இருப்பதனால்.

தொலைக்காட்சியில் நமக்குப்
பிடிக்காத காட்சி வந்தால் எப்படிச்
சொல்லலாம்?
–தொல்லைக் காட்சி என்று.

ஒரு நாய் ஓடோடி வந்து ஒரு
பேக்காி முன் நின்றால் என்ன
வாங்கும்?
–மூச்சு வாங்கும்.


படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறள்

4.

வேண்டுதல் வேண்டாமை இலானடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விளக்க உரை: விருப்பு வெறுப்பு இல்லாத இறைவன் திருவடிகளைச் சேர்ந்தார்க்கு என்றும் துன்பம் இல்லை.

5.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு – அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

விளக்க உரை: தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனின் திருவடியை அடைந்தவர்களைத் தவிர பிறர் தம் மனக்கவலையை மாற்றல் அரிது என்பது கருத்து.



## வான்சிறப்பு

வானினின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்று உணரற்பாற்று.

விளக்க உரை: மழையால் உலகம் நிலை பெற்று வாழ்வதால் அம்மழையை உலகிற்கு அமிழ்தம் என்று கருத வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# தேன் தமிழ்

மூட்டைப் பூச்சியைப்
போல் இம்சித்து
வாழாதே
எலியைப் போல்
திருடி வயிற்றை
வளர்க்காதே
கறையான் போல்
பிறர் பொருளைக்
கையாண்டு மகிழாதே
தேனியைப் போல்
உழைத்து உண்
அது அன்பைத்
தரும்.

வாரியார் உரையலிருந்து

## கங்காரு

முதன் முதலாக அவுஸ்ரேலியா நாட்டுக்குள் பிரவேசித்த ஆங்கிலேயரான கப்டன் குக் என்பவர் உள்ளூர் வாசிகளிடம் ஒரு மிருகத்தைக் காட்டி "இதன் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த மக்கள் தங்கள் பாசையில் "தெரியாது" என்ற கருத்தில் கங்காரு என்றனர். கப்டன் குக்கும் உடனே மிருகத்தின் பெயர் "கங்காரு" என்று விளங்கிவிட்டார். கங்காரு என்று அப்படியே அழைக்கின்றோம்.

## தேன் துளி

★ கவலைப்படுவதைவிட மகிழ்ச்சி அடைவது தெய்வீக அனுபவம். ஏனென்றால் மகிழ்ச்சி என்பது விருந்தைப் போன்றது; கவலை என்பதோ கசப்பான மருந்தைப் போன்றது.

★ கடவுள் நமக்குள் தங்கியிருப்பதால் ஏற்படும் எதிரொலியே மகிழ்ச்சியாகும்.

உலகம்
பொது.
உடமை
பொது.
உரிமை
பொது
வைப்போம்

படிப்பகம்

www.padippakam.com

உ

சிவமயம்

நெல்லண்டை அம்மன் துணை

# வெற்றிக்கு சிலவழிகள்

உங்கள் எதிர்கால பலனை அறிந்து செயற்படுங்கள் !!
உங்கள் சாதகப்படி ***சாதகமான காலங்களில்*** : உங்களுக்கு *பொருத்தமான* ***சுபநேரங்களில்*** வீட்டை வாங்குங்கள்! வியாபாரத்தை ஆரம்பியுங்கள்! துணிந்து முதலீடு செய்யுங்கள்! புதிய முயற்சிகளைச் செய்யுங்கள்! வெற்றி நிச்சயம்!!

**பாதகமான காலங்களில்** : எந்த ஒரு முதலீட்டையும் செய்யாதீர்கள்! கடன் கொடாதீர்கள்! கூடியவரை பிரயாணங்களைத் தவிருங்கள்! வாய்க்குப் பூட்டுப் போடுங்கள்! கூடாத காலங்களில் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் தோல்வியை அல்லது தடைகளைத் தரும். உங்களுக்கு சாதகமான காலம் எது? பாதகமான காலம் எது? என்பதை அறிவதற்கும், சாதகம் கணிப்பதற்கும், எதிர்கால பலனை அறிவதற்கும், கல்யாணத்திற்கோ அல்லது வீடு குடிபுகுவதற்கோ சுபநேரம் கணிப்பதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

இலங்கையிலுள்ள சில சோதிடர்கள் ஐரோப்பிய நாடுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு சாதகம் கணிப்பதற்கு நேரத்தை மட்டும் மாற்றிவிட்டு, பாகைகள் வித்தியாசங்களை கவனத்தில் கொள்ளாது, பிழையாக சாதகங்களை கணித்துள்ளனர். இலங்கைப் பஞ்சாங்கத்தில் உள்ள சுபநேரங்களும் இலக்கினங்களும் இலங்கைக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் மாத்திரமே பொருந்தும். ஆகவே இலங்கையைவிட பாகை வித்தியாசங்களில் உள்ள நாடுகளுக்கு சுபநேரங்களும், அதற்குரிய இலக்கினங்களும் கணிக்கப்படல் வேண்டும். சாதகம் கணிப்பதில் பாவச்சக்கரம் மிக பிரதானமானதாகும். இதை Ephemeris முறைப்படி கணிப்பதுதான் மிகவும் நுணுக்கமானதாக அமையும் என்பதையும் அறிய தருகின்றேன். சாதகம் சரியாக கணிக்கப்படாவிட்டால் சொல்லப்படும் பலன்கள் பிழைப்பதுடன், அப் பிள்ளைக்கு திருமணப் பொருத்தம் பார்க்கும்போது பெரிய தவறு ஏற்படும் என்பதையும் நினைவு கூர்கின்றேன்.

*S. Balasubrahmaniam*

*Sprotoften - 12, 2.th., 5800 Nyborg. Danmark.*

*Telephone : 65 317539*

*உங்கள் நண்பர்களிடம் இதை வாசிக்கக் கொடுப்பதன் மூலம் அவர்களையும் பயனடைய செய்யுங்கள்.*

படிப்பகம்

www.padippakam.com



பார்க்க...!
படிக்க...!
பாதுகாக்க...!
அரும்பு...!

படிப்பகம்